ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

23.05.2012 - மலர் 09, இதழ் 12

## ஆகாய விமானத்தின் அறிமுகமும் வளர்ச்சியும்





வாசகர் முகம்



## காண்டா மிருகங்கள் அழியும் அபாயத்தில்.....!





## கடல் ஆமைகளின் வாழ்க்கை வட்டம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேற்கு நாடுகளின் வர்த்தகப் போட்டி

ஒல்லாந்தர்களைத் துரத்திவிட்டு ஆங்கிலேயர்கள் இலங்கையின் ஆட்சியைப் பிடிக்க முயற்சித்தது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகவே இருந்தது. அன்று போர்த்துக்கேயர் கீழைத்தேய வர்த்தகத்தின்மூலம் பெற்றுக்கொண்ட லாபத்தைக்கண்டு, ஆங்கிலேயர் பேராசைப்பட்டதே இதற்குக் காரணமாக இருந்தது. அவ்வாறே, ஒல்லாந்தரும் பிரான்சியரும்கூட, பேரவாக் கொண்டிருந்தனர்.

இத்தகைய காரணத்தால், கி.பி. 1600 இல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கமும் கி.பி. 1644 இல் கீழைத்தேய வர்த்தகத்திற்காக, பிரான்சியர்களால் பிரெஞ்சு வர்த்தக சங்கமும் நிறுவப்பட்டன. அவர்கள் வர்த்தகத்திற்காகவே, கீழைத்தேய நாடுகளுக்கு வந்திருந்தனர். அவர்களுக்கு ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகளைக் கைப்பற்றும் நோக்கம் சிறிதும் இருக்கவில்லை. தமது வர்த்தகத்தை மேற்கொள்ளும் எண்ணம் மாத்திரமே இருந்தது. சுருங்கக்கூறின், இந்தியாவின் ஒரு பிராந்தியத்தைக்கூட கைப்பற்றும் எண்ணம் இருக்கவில்லை. ஏனெனில், அதனை கைப்பற்றுவதற்குரிய படைபலமும் அவர்களிடம் இருக்கவில்லை.

அக்காலத்தில் இந்தியாவில் மிகப் பலமான முகலாய மன்னர்களின் ஆட்சி நிலவியது. அவர்களுடன் யுத்தம் செய்வது ஒன்றும் இலகுவான விடயம் அல்ல என்பதனையும் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். அதனால், இந்தியாவின் இராஜாதி இராஜ மன்னனின் அனுமதியைப் பெற்று கரையோரப் பிரதேசங்களில் மாத்திரம் வர்த்தக நிலையங்களை அமைப்பதன் மூலம் திருப்தி அடைந்தனர்.

இந்த, ஐரோப்பியர்களில் முதன்முதலாக இந்தியாவிற்கு வருகை தந்தவர்கள் போர்த்துக்கேயர்களே ஆவர். இவர்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது, இந்தியா பிளவுபட்டுக் கிடந்தது. வடக்கே சில முஸ்லிம் அரசுகளும் தெற்கே விஜயநகரப் பேரரசு எனும் இந்து சாம்ராஜ்யமும் காணப்பட்டது. இங்குள்ள மன்னர்கள் தமக்குள் ஒற்றுமையின்றி, ஒருவருக்கொருவர் தாக்குதல் நடத்தி பகைமை பாராட்டிய வண்ணம் இருந்தனர். அதனால், போர்த்துக்கேயர்களை அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அவர்களுக்கு எதிரான எந்த முயற்சிகளிலும் ஈடுபடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி வாசகர்களே...!

- உங்கள் வீட்டிற்கே 'விஜய்' யை வரவழைக்கலாம்.
- மேலதிக கட்டணங்கள் கிடையாது.
- சந்தா அடிப்படையில் 30 சதவீதம் வரை விலைக்கழிவும் பெறலாம்.

**விரையுங்கள்....**

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: 081 2205028

081 2205029, 0772614371


### உ/தர தேசிய பாடசாலை அனுமதி:

# கல்வி அமைச்சின் தீர்மானம் அடுத்த வருடத்திற்கு ஒத்திவைப்பு



தேசிய பாடசாலையொன்றில் க.பொ.த. சா/தர பரீட்சையில் சித்திபெற்று உயர்தரம் கற்பதற்கு வேறொரு தேசிய பாடசாலையை தெரிவுசெய்வதைத் தடைசெய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளமை தொடர்பாக, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் புத்திஜீவிகள் தமது அதிருப்தியை தெரிவித்ததையடுத்து இந்தத் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட சா/தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வேறொரு தேசிய பாடசாலைக்குச் செல்வதற்கு அனுமதியைப் பெற்றிருந்த மாணவர்கள் பலர் இந்தப் புதிய தீர்மானத்தினால் நிர்க்கதி நிலைக்கு ஆளாகும் நிலையையிட்டு பலரும் விசனம் தெரிவித்திருந்தனர்.

முன்னைய தீர்மானம் குறித்து கருத்துத் தெரிவித்திருந்த கல்வி அமைச்சு, தேசிய பாடசாலையில் சா/தர பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையும் சில மாணவர்கள், உயர்தரத்திற்கென தெரிவுசெய்யும் பாடப்பிரிவுகள் அதே பாடசாலையில் இருக்கின்ற நிலையிலும் வேறு தேசிய பாடசாலைகளில் அனுமதி கோருகின்றனர். ஆகையினாலேயே, இதற்குத் தடை விதித்திருந்ததாகவும் ஆனால், கஷ்டப் பிரதேச தேசிய பாடசாலை மாணவர்களுக்கும் தொழில் இடமாற்றம் பெறும் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகளுக்கும் மாத்திரமே இதில் விதிவிலக்கு அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இருப்பினும், ஒத்திவைக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் அடுத்த வருடம் அமுல்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உ/தர பெறுபேறுகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பு அடுத்த மாதம்



கடந்த வருடம் (2011) நடைபெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் மற்றும் 'Z' புள்ளிகள் தொடர்பில் பலத்த வாத விவாதங்கள் எழுந்திருந்தமை அறிந்ததே. இந்நிலையில், மேற்படி பெறுபேறுகள் தொடர்பாகத் தமது அதிருப்தியை வெளிப்படுத்தவும் ஏற்பட்ட குளறுபடிகளை நிவர்த்தி செய்யுமாறு கோரியும் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க, நிமல் காமினி அமரதுங்க, ஜே. ஸ்ரீபவன் ஆகியோரை உள்ளடக்கிய நீதவான் குழுவின் முன்னிலையிலேயே, மேற்படி வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

2011 க.பொ.த. உ/தர பரீட்சைக்குத் தோற்றிய 11 பரீட்சார்த்திகள் தொடுத்த இந்த முறையீட்டு மனுவைக் கவனத்தில்கொண்ட நீதவான் குழுவினர் உ/தர பரீட்சையானது, நாட்டின் மிகவும் முக்கியத்துவம் மிக்க பரீட்சை எனவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த மனுமீதான தீர்ப்பை வழங்குவதற்கு முன்னர், மேற்படி வழக்கு விசாரணைகளில் எழுந்துள்ள குறைபாடுகள் தொடர்பாக, உரிய வல்லுனர்கள் மற்றும் ஏனைய அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களினதும் கருத்துக்களை அறிவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளதாக நீதவான் குழுவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டும் அதிபர் நியமனங்கள் ஏன் இல்லை?

### ஆசிரியர் சங்க செயலாளர் கேள்வி

நாடளாவிய ரீதியில் 78 பாடசாலைகளில் நிரப்பப்படாதுள்ள அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கல்வித்துறை அமைச்சிடம் கேட்டுள்ளார்.



மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே 6 மாதங்களுக்கு முன்னமே கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டபோதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று ஜோசப் ஸ்டாலின் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு கல்வித்துறை அமைச்சரிடம் வழங்கப்பட்டபோதிலும் இவர்களுக்குரிய நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இதேவேளை, மலையகப்பகுதி பாடசாலைகள் பலவற்றில் பதின்மூன்று வருடங்களுக்கும் மேல் கடமையாற்றி வருகின்ற அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாத நிலையில் தொடர்ந்தும் அதே பாடசாலையில் அவர்கள் கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சில பாடசாலைகளில் உப அதிபர்களே, அதிபராக உத்தியோகப்பற்றற்ற ரீதியில் கடமையாற்றி வருகின்ற சூழலைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்வாறு பரவலாக அதிபர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்ற நிலையில், அப்பதவி நிலைகள் நிரப்பப்படாதிருப்பது ஏன்? என்றும் ஆசிரியர் சங்க செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.


விஜய் Vijey

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


# விண்ணப்பப்படிவம் ஜூன் மாதத்தில்



*அடுத்த வருடம் (2013) அரசாங்கப் பாடசாலைகளில் தரம்-1 வகுப்புகளுக்கு அனுமதி கோருவதற்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி வெளியிடப்படும் என்று கல்வித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.*

*இது தொடர்பான விதிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கை குறித்து அதே நாளில் தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்று கல்வித்துறை அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர தெரிவித்துள்ளார்.*

**வாசகர் முகம்**



**'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர் யூ.விஷாக்கா மிலேனியா, தோணிக்கல், வவுனியா.**


## 30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

**ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்**

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு பெயர்/முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்

10 பாடத்தொகுதிகள் / **Spoken English Video CD** ஒன்று
அழகிய பேக் (Bag) ஒன்று **Video CD** வழிகாட்டி புத்தகம்.
அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று அடையாள அட்டை
**Diploma in English** சான்றிதழ் ஒன்று என்பன
எல்லா மாவணவ/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.

எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

**UNION EDUCATIONAL INSTITUTE**

P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081 222 77 11 / 0773 123 523


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் நாம் பலதரப் பட்டவர்களிடம் பலதரப்பட்ட சமூக மட்டங்களைச் சேர்ந்தவர்களிடம் எமது தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம். அதேபோன்று, பாடசாலை, வகுப்பு, என ஒவ்வொருவருடன் தொடர்புகளைப் பேணவும் தொடர்பாடல் அவசியமாகின்றது. தற்போதைய சமூகத்தில் பல நெருக்கடிகள் மோதல்கள் ஏற்படுவதற்கு தொடர்பாடலின் பலவீனங்கள் காரணமாகியுள்ளன. வெற்றிகரமான தொடர்பாடலுக்கு நன்கு பேசப் பழகிக்கொள்வது மிக அவசியமாகும். எந்தவொரு மொழியைக் கற்கும்போதும் பிரதான நான்கு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும். அவையாவன;

**1. செவி மடுத்தல் 2. உரையாடுதல்**
**3. வாசித்தல் 4. எழுதுதல்**

இந்த நான்கு அம்சங்களில் செவி மடுத்தலும் உரையாடுதலும் அனைவரிடமும் இயற்கையாக இருக்கக்கூடிய விடயங்களாகும். பயிற்சி பெறாமலேயே, செவிப்புலன் அற்றோர் மற்றும் பேச முடியாதவர்களைத்தவிர, ஏனைய அனைவருக்கும் இயற்கையாகவே செவிமடுக்கவும், பேசுவதற்கும் ஆற்றல் உண்டு. ஆனால், எழுதுதல், வாசித்தல் என்பன அதனைவிட மிகவும் வித்தியாசமான செயற்பாடுகளாகும். இவற்றை மெருகேற்றிக்கொள்ள ஆசிரியர்களினதும் வயது வந்தோர்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. தொடர்பாடலில் செவிமடுத்தல், உரையாடுதல் ஆகிய இரண்டு விடயங்களும் ஒருங்கே முக்கியத்துவம் பெறுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் செவிமடுத்தலின் அடிப்படையில் உரையாடுதலும், உரையாடுதலின் அடிப்படையில் செவிமடுத்தலும் ஒன்றையொன்று தங்கியிருக்கின்றன.


செவி மடுத்தல் | உரையாடுதல் | வாசித்தல் | எழுதுதல்

# ஆழமாக செவிமடுப்போம்; அழகாகப் பேசுவோம்!

## செவிமடுத்தலும் உரைநிகழ்த்தலும்

செவிமடுப்பதனூடாக, தொடர்பாடலின் போது பல விடயங்கள் உள்வாங்கப்படுகின்றன. உரையாடலின் திறமையிலேயே, வெற்றிகரமான செவிமடுத்தல் தங்கியிருக்கின்றது. அதற்காக உரை நிகழ்த்துபவரின், ✱ மொழி ✱ மனதை ஈர்க்கும் உரையின் இயல்பு ✱ உணர்ச்சி வெளிப்பாடு (இரக்கம், அன்பு, கோபம்) என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

செவிமடுப்போரை தமது பேச்சாற்றல் மூலம் பிணைத்து வைத்திருத்தல் மற்றும் வைத்திருக்காதிருத்தல் என்பன உரை நிகழ்த்துபவரின் திறமையில்தான் தங்கியுள்ளது. அதேபோன்று, உரை நிகழ்த்துபவரது அளவிற்கு செவிமடுப்பவரும் திறமை வாய்ந்தவராக இருக்கவேண்டும். உரை நிகழ்த்துபவரின் சைகைகள்,முகபாவங்கள், குரலின் ஏற்றத்தாழ்வுகளின் ஊடாக, செவி மடுப்பவர்கள் பல விடயங்களை உள்வாங்கிக்கொள்கின்றனர். செவிமடுப்பவர், செவி மடுக்கும் விடயங்களில் 10 சதவீதத்தினை உள்வாங்கிக்கொள்கின்றனர். விடயங்களில் 90 சதவீதமானவை உரைநிகழ்த்துபவர்களின் அங்க அசைவுகளினூடாக உள்வாங்கப்படுகின்றது.



## வார்த்தைகளின் பலம்

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் பலம் இருக்கின்றது. தொடர்பாடலில் வார்த்தைகளினால் ஆச்சரியங்களை நிகழ்த்தமுடியும். பலருக்கு அந்த சக்தியினைப் பயன்படுத்தத் தெரிவதில்லை. உரை நிகழ்த்துபவரால் பயன்படுத்தக்கூடாத வார்த்தைகளும் உண்டு. வா, போ என்ற மரியாதைக் குறைவான வார்த்தைகள் மோதலுக்கு வழிவகுக்கும். பேசுபவர் அன்பாகப் பேசும்போது, அந்த உணர்வு செவிமடுப்பவரையும் சென்றடையும். பேசும் வார்த்தைகளுக்கு ஏற்ப அந்த வார்த்தைக்கே உரிய உணர்வுகளும் பேசுபவரால் தொடர்பாடலுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதனால், அனைவரின் மனதையும் வெல்லக்கூடியவாறும் சமூகத்திற்கு நல்லது நிகழக்கூடியவாறும் வார்த்தைகளைப் பிரயோகிப்பது அவசியமானதாகும்.



நாம் பேசும் வார்த்தைகளினூடாகவும் சொற்களை உச்சரிக்கும் முறைகளினூடாகவும் எமது குடும்பச் சூழல், வளர்ப்பு முறை, கல்வி மட்டம் என்பனவற்றை அறிந்துகொள்ள முடியும். சிறந்த குடும்பப் பின்னணி மட்டுமே காரணமாக இருக்கும் என்றும் கூற இயலாது. ஒரு நபர் தாம் வயது முதிரும்போது, தாம் பயன்படுத்த வேண்டிய சொற்கள் எவை, பயன்படுத்தக் கூடாத சொற்கள் எவை என்பதனை தெளிவாக விளங்கிக்கொள்வர். இந்த ஆற்றல் ஒருவர் பக்குவமடையும்போது கிடைத்து விடுகின்றது.

விகொட்ஸ்கி நொம்பிஸ்கி போன்ற உளவியலாளர்களின் கருத்தின்படி, ''உரைகளை உள்வாங்கிக்கொள்ளக்கூடிய பகுதி பிறப்பிலேயே எமக்கு அமைந்துள்ளது. எந்த மொழியாயினும், தாம் செவிமடுப்பதனையே பிள்ளைகள் உள்வாங்கிக்கொள்கின்றனர். அந்த சொல்லுடன், மொழியைப் பயன்படுத்துபவர் வெளிக்காட்டிய உணர்வுகளை பிள்ளைகள் பின்பற்றுகின்றனர். இதன்படி, தொடர்பாடலில் வயது வந்தவர்கள், பெற்றோர்கள் மொழியினைப் பயன்படுத்தும்போது, பின்பற்றும் முறைகளையும் உணர்வுகளையும் பிள்ளைகள் கூர்மையாக அவதானிக்கின்றனர்''

## பேச்சாற்றலுக்கு அடிப்படையாகும் சூழல்

வளரும் பிள்ளைகளின் மொழியாற்றல் வளர்ச்சியில் சுற்றுப்புறச்சூழல் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. எப்பொழுதும் அன்பான, இனிமையான வார்த்தைகளையே பிள்ளைகள் செவிமடுக்கின்றனர் எனில், பிள்ளைகளும் அதே வார்த்தைகளையே பயன்படுத்துகின்றனர். மோசமான, கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை செவிமடுத்தால், பிள்ளைகளும் அவ்வாறே சொற்களைப் பயன்படுத்துகின்றனர். பிள்ளைகள் தமது தொடர்பாடலுக்குத் தேவையான சொற்களில் 90 சதவீதமானவற்றினை 3 வயதுக்குள் பெற்று விடுகின்றனர். இதனால், பிள்ளைகளின் முன்னிலையில் இனிமையான முறையில் பேசுவதற்கு வயதுவந்தோர் எப்பொழுதும் முயற்சிக்க வேண்டும்.

தற்போதைய சமூகத்தில் பண்டைய காலத்தைப்போன்று பெற்றோர்-பிள்ளைகள் உறவு நெருக்கமானதாகக் காணப்படுவதில்லை. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு விரிசல் அடைந்து வருகின்றது. அவர்களுக்கு பேசிக் கொள்வதற்குக்கூட நேரமில்லை. அதேபோன்று, முன்னைய காலங்களில் அதிகளவு உறுப்பினர்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால், தற்போது குடும்பங்களில் தாய், தந்தை, பிள்ளைகள் மட்டுமே உள்ளனர். இதனால், அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவோ, பேசுவதற்கோ பிள்ளைகளுக்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இதனால், தமது உணர்ச்சிகளை செயலின் மூலம் பிள்ளைகள் வெளிக்காட்டுகின்றனர். இவ்வாறான மோசமான சமூக சீர்கேடுகள் நிகழ்வதற்குக் காரணமாக, தொடர்பாடலின் பலவீனம், குறிப்பாக பேச்சின் பலவீனம் என்பனவற்றை காரணங்களாகக் குறிப்பிடமுடியும்.

## பேச்சினை மெருகேற்றத் தேவையான விடயங்கள்

✱ ஒழுக்கமான முறையில், உணர்வுகளைப் பாதுகாக்கும் வகையில் பேசுதல்.
✱ நட்புறவு ஏற்படக்கூடியவாறு பேசுதல்.
✱ ஆவேச உணர்வுகளைக் குறைவாகப் பயன்படுத்தல். (கோபம், சோகம், மகிழ்வு என்பன)
✱ ஏனையவர்களின் கருத்துக்களைப் பொறுத்துக் கொண்டு தமது, கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றல்.
✱ தாம் முன்வைக்கும் விடயங்களை நம்பிக்கையுடன் முன்வைத்தல்.
✱ செவிமடுப்பவரின் நிலைமையை உணர்ந்து பேசுதல்.
✱ தமது பேச்சை சிறப்படையச் செய்வதற்கு உடல் அசைவுகளையும் முகபாவங்களையும் பயன்படுத்தத் தெரிந்திருத்தல்.
✱ எளிய மொழி, இலகுவான தரமான பேச்சு, சிறந்த உதாரணங்களைப் பயன்படுத்திக் கொள்ளல்.
✱ நட்புக் கொள்ளல், அன்பாகப் பேசுதல்.
✱ அடிக்கடி பயிற்சிகளில் ஈடுபடல்

## செவிமடுப்பவர் முன்னேற்றிக் கொள்ள வேண்டியவை

✱ பொறுமை
✱ அவதானம்
✱ அக்கறையுடன் செவிமடுத்தல்
(செவிமடுப்பவரின் அக்கறை குறைவாக இருப்பதனை உரைநிகழ்த்துபவர் அறிந்துகொண்டால், உரை சிறப்பாக அமையாது தடுமாற்றம் ஏற்படும்)
✱ கேட்கும் விடயங்களைப் புரிந்துகொள்ளல் வேண்டும்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீண்டநேரம் கற்பது எவ்வாறு?

கல்வி
முகாமைத்துவம் - 108

## கற்றலுக்கான ஆலோசனைகள்

'கற்றல்' என்பது பகுத்தறிவைப் பயன்படுத்திப் பிரித்து-ஆராய்ந்து இலகுவான முறையில் உள்வாங்கும் ஒரு செயற்பாடாகும். கற்றலை நுணுக்கமான நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்றுக்கொண்டால், அதை இலகுவான முறையில் பிரயோகிக்க முடியும். கற்றலை நீண்டநேரம் மேற்கொள்வதானது, கற்றலை நுணுக்கமாக வெற்றிகொள்வதற்கு இலகு வழியாகும். கற்றலை நீண்டநேரம் மேற்கொள்ள வேண்டும் என்பது மாணவர்களின் மிகப் பெரிய ஆசையாகும். ஆனால், நீண்டநேரம் கற்பது பெரும்பாலான மாணவர்களுக்கு கனவாகவே அமைந்துவிடுகின்றது.



கற்றலை சரியான முறையில் மேற்கொண்டால், அதனை நீண்டநேரம் கற்க முடியும். வாசித்துக் கற்றல் என்பது, பொதுவான விடயம் என்றபோதும், கற்றலின்போது ஒரு விடயத்தை முழுமையாக விளங்கிப் பூரணமாகக் கற்கவேண்டும். அதேவேளை, அதே விடயத்தை முழுமையாக விளங்க வேண்டும் என்பதற்காக, அதைச் சத்தமாக வாசிக்கக் கூடாது. சத்தமாக வாசித்துக் கற்பதால் உடலின் சக்தி இழக்கப்படுகின்றது. இதனால், நீண்டநேரம் கற்க முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே, முடிந்தளவு மெதுவாக வாசித்துக் கற்பதைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன், கற்கும் அறையில் இருக்கும் விளக்குகள் குறைந்த வெளிச்சம் உடையனவாக இருக்கக்கூடாது. ஏனெனில், மங்கிய வெளிச்சத்தில் பாடத்தை வாசிக்கும்போது, கண்களுக்கு வலி ஏற்படும். இதனால், நீண்டநேரம் கற்க முடியாத அசௌகரிய நிலை ஏற்படும். ஆகவே, கற்கும் அறையில் தெளிவான வெளிச்சம் இருக்க வேண்டும். அத்துடன், நீண்டநேரத்திற்கு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு கற்கக் கூடாது. இதனாலும் கண்களுக்கு வலி ஏற்படும். எனவே, இடைக்கிடையே பார்வையைத் திசை திருப்புதல், மூச்சுப் பயிற்சி செய்தல், நீர் அருந்துதல் போன்ற சிறு செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். அப்போது நீண்டநேரம் கற்கலாம்.

கற்கும்போது, பசியோடு கற்கக்கூடாது. பசியோடு கற்பதால் உடலின் சக்தி இழக்கப்படும். இதனால், அதிகநேரம் கற்க முடியாமல்போகும். ஆக, கற்பதற்குத் தயாராகும் முன்னர் அளவோடு உணவை உட்கொள்ள வேண்டும். சிலர் இரவில் அதிகநேரம் விழித்திருந்து கற்றுக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருப்பர். இதனால், மூளை பாதிப்படைகின்றது. ஆகவே, இரவுநேரம் விழித்திருந்து கற்பதற்கு முன்னர் நன்றாக நித்திரை செய்துவிட்டுக் கற்றலை மேற்கொள்ளலாம். முறையான தூக்கமின்றிக் கற்றால் பின்னர் தொடர்ந்து கற்க முடியாமல் போய்விடும். மேலும், நீண்டநேரம் கற்றலை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக, தொடர்ச்சியாக கற்றலில் ஈடுபடக்கூடாது. தொடர்ச்சியாகக் கற்பதால் மூளைக்கும் உடலுக்கும் இடையிலான சமநிலைத் தன்மை இழக்கப்படுகின்றது. எனவே, தொடர்ச்சியாக முழு மூச்சுடன் கற்காமல், இடைவெளி விட்டு விட்டுக் கற்பதால் கூடியநேரத்திற்கு கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

அவ்வாறே, கற்கும்போது விளங்காத பகுதியை வைத்துக்கொண்டு திண்டாடக்கூடாது. விளங்காத பகுதியை விட்டுவிட்டு விளங்கிய பகுதியை முதலில் வாசித்துக் கற்க வேண்டும். விளங்காத பகுதியை பிறிதொரு நேரத்தில் விளங்கிக்கொள்ளலாம். ஏனெனில், விளங்காத பகுதியை வைத்துக்கொண்டு இருப்பதால், அதைச் சிந்தித்து சிந்தித்தே மூளையில் நெருக்கடி நிலை தோன்றும். அத்துடன், அதனால் நேரமும் வீணாக்கப்பட்டு நீண்டநேரக் கற்றலின் பயனை அடைந்துகொள்ள முடியாமல் போகும்.

நீண்டநேரத்திற்கு கற்றலைத் தொடரும்போது, ஒரு பாடத்தை வைத்துக்கொண்டே கற்கக் கூடாது. மாறாக, பாடங்களை மாறிமாறிக் கற்றுக்கொள்ள வேண்டும்.



அப்போதுதான் சிந்தனைகளை மாற்றியமைக்க முடியும். பாடங்கள் மாறுபடும்போது, புதியபுதிய சிந்தனைகள் உருவாக்கப்படுவதால், மூளைக்கு சுறுசுறுப்பு ஏற்படும். இதனால், தொடராக நீண்டநேரத்திற்குக் கற்கலாம்.

கற்கும்போது, ஒரே இடத்தில் அமர்ந்துகொண்டு கற்காமல், சிறு இடைவெளி விட்டு வேறு இடத்தில் அமர்ந்து கற்கலாம். இதனால், அதிகநேரம் உடலைப் பாரப்படுத்தாமல் கற்க முடியும். அவ்வாறே, கற்றல் சூழல் என்பது கற்றலுக்குப் பெரிதும் அவசியமாகும். ஆகவே, ஒரே சூழலில் இருந்து கற்காமல் வேறு வேறு சூழலில் இருந்து கற்கவேண்டும். இதனால், மூளை சரிவர இயங்கும். இதனால், அதிகநேரம் கற்க முடியும். இவ்வாறு அதிகநேரம் கற்பதனூடாக, சிறப்பாகக் கற்றலை மேற்கொண்டு பெறுபேறுகளை அதிகரித்துக் கொள்ளவும் வாழ்வில் வெற்றி பெறவும் முயற்சிப்போம்.

(தொடரும்)


**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# சூரியனை ஆய்வு செய்யவுள்ள 'SolO' செய்மதி

சூரியனை ஆய்வு செய்வதற்காக, ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம் (European Space Agency - ESA) சூரிய ஆய்வுச் செய்மதியொன்றை விண்ணுக்கு ஏவத் திட்டமிட்டுள்ளது. ஐக்கிய ராச்சியத்தின் Astrium UK என்ற நிறுவனம் இந்த செய்மதியைத் தயாரிக்கவுள்ளது. இந்த செய்மதிக்கு 'SolO' (Solar Orbiter) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த சூரிய ஆய்வுச் செய்மதியானது, 500 பாகை செல்சியஸ் வெப்பத்தைத் தாங்கக்கூடிய வகையில் உலோகக் கலவையினாலான தகடுகளால் தயாரிக்கப்படவுள்ளது. 8 கன சதுர மீற்றர் அளவில் வடிவமைக்கப்படவுள்ளதுடன், அதன் வெளிப்புறத் தகடு 30 சென்ரிமீற்றர் கனமாக இருக்கும். அத்துடன், இந்த செய்மதியின்மீது வெப்பத்தைத் தாங்கக்கூடிய டைட்டானியம் உலோகக் கலவையினாலான தகடும் பொருத்தப்படவுள்ளது. இந்த செய்மதியைத் தயாரிப்பதற்கான உதிரிப் பாகங்களை பல்வேறு ஐரோப்பிய நிறுவனங்கள் வழங்கவுள்ளன. அத்துடன், அமெரிக்காவும் இத்திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதற்கமைவாக, அமெரிக்காவின் நாஸா விண்வெளி நிறுவனமானது, செய்மதியை ஏவுவதற்கான ரொக்கெட் உட்பட, மற்றுமோர் உபகரணத்தையும் வழங்கவுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இச்செய்மதி 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. மத்திய ஃப்ளோரிடாவிலுள்ள கென்னடி விண் ஏவுதளத்திலிருந்து அற்லஸ் V-401 எனும் ரொக்கெட் இதனை விண்ணுக்குச் சுமந்து செல்லவுள்ளது. ஏழு ஆண்டுகளுக்கு செயற்பாட்டில் இருக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு வருகின்ற இந்த செய்மதியானது, சூரியனுக்கு அருகே $1\frac{1}{2}$ கோடி கிலோ மீற்றர் தூரத்தில் அதாவது, புதன் கோளின் சுற்றுப் பாதைக்குள் நிலைநிறுத்தப்பட்டு, சூரியனைப் புகைப்படங்கள் எடுக்கவுள்ளதுடன் அது தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்ளும். அத்துடன், சூரியனில் இருந்து வெளியாகும் காந்தப் புயலானது, செய்மதிகளின் தகவல் தொடர்பைப் பாதிப்பது






குறித்தும் காந்த அலைகள் உருவாவது குறித்தும் இந்தச் செய்மதி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

விண்வெளி யுகத்தில் ஐக்கிய ராச்சியம் காலடி எடுத்து வைத்து இவ்வருடம் (2012) ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியுடன் 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. அத்தினத்திலேயே, இந்த SolO செய்மதி ஏவுகைக்கான ஒப்பந்தம் ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்திற்கும் Astrium Uk என்ற நிறுவனத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது. 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி ஏரியல்-1 என்ற செய்மதியை விண்ணுக்கு ஏவியதை அடுத்தே, ஐக்கிய ராச்சியம் விண்வெளி யுகத்தில் பிரவேசித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# உயிர்வாழத் தகுதியுடைய நிலையில் மேலும் பல கிரகங்கள் இருக்கலாம்!

## சர்வதேச விஞ்ஞானிகள் தெரிவிப்பு





உயிர்வாழத் தகுதியுடைய நிலையில் ஏராளமான கிரகங்கள் இப்பிரபஞ்சத்தில் இருக்கலாம் எனவும் இப்பிரபஞ்சத்திலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையிலும் அதிகமாக அவை காணப்படலாம் எனவும் கிரகங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் சர்வதேச விஞ்ஞானிகள் குழுவொன்று தெரிவித்துள்ளது. அக்குழுவில் அங்கம் வகிக்கும் அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழக விண்வெளி விஞ்ஞானியான ஆதித்யா சோப்ரா தலைமையிலான குழுவினரே, இக்கருத்தைத் தெரிவித்துள்ளனர். தொலைவிலுள்ள கிரகங்களைப் பற்றி ஆய்வொன்றினை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே, பூமியை ஒத்த தன்மைகளை உடைய இக்கிரகங்கள் உயிர்கள் வாழத் தகுதியுள்ளவையாக இருக்கின்றன என்று அக்குழுவினர் தெரிவித்துள்ளனர். அங்கு திரவ நிலையில் நீர் மற்றும் சீரான தட்பவெப்பநிலை போன்றவை இருப்பது தெரியவந்துள்ளதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். பல கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, இந்தக் கிரகங்களில் மனிதர்கள் உட்பட, பிற உயிரினங்கள் வாழக்கூடிய தகுதி இருந்துள்ளதாகவும் இந்த ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு பறவையைப்போன்று சுதந்திரமாகப் பறப்பதற்குக் கிடைத்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்! அன்று முதல் இன்றுவரை மனிதர்கள் பறப்பதைப்பற்றி இவ்வாறே சிந்தித்து வருகின்றார்கள். ஆனால், மனிதனுக்கு இறக்கைகள் இல்லாவிடினும், ஆகாயத்தில் பறந்து செல்லும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.



# நீலவானை வெற்றிகொ ஆகாய விமானங்கள்


## கிரேக்க புராணக் கதைகள்

பறப்பது தொடர்பில் மனிதனுக்குள்ள விருப்பம் பண்டையகாலப் புராணக் கதைகளிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. கிரேக்க புராணக் கதைகளில் வரும் டட்லஸ் மற்றும் இக்காரஸ் ஆகிய இருவரின் கதைகளிலும் விமானம் ஒன்றைப் பற்றிய கருத்துக்கள் கூறப்படுவதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆகாய விமானங்களின் வரலாறு

**லியனாடோ டாவின்சி:** உலகப் புகழ்பெற்ற ஓவியரான லியனாடோ டாவின்சியின் தொழில்நுட்ப ஆற்றலானது, வியப்புக்குரியதாகும். விஞ்ஞான ரீதியிலான விமானம், ஹெலிகொப்டர் மற்றும் பெரசூட் பற்றிய எண்ணங்கள் அக்காலகட்டங்களிலேயே, டாவின்சியின் சிந்தனையில் உதித்துள்ளது. அவரால் வரையப்பட்ட மாதிரி வரைபடங்களில் இதனை உறுதிப்படுத்த முடியும்.







## ஆகாய விமானங்கள் பற்றிய புராணக் கதைகள்

**இராவணன்:** இராமாயணத்தில் தெரிவிக்கப்படும் இராவணனின் உத்தியோகபூர்வ விமானம் 'புஷ்பக விமானம்' எனப்படும் மயில் பறவையாகும். இது ஓர் ஆச்சரியமான விமானமாகும். மரத்தாலான இந்த விமானத்தின் எரிபொருளாக ரசம் ஒன்று பயன்படுத்தப்பட்டதாகவும் இந்த ரசமானது, மாணிக்கம் ஒன்றின் உதவியுடன் சூடாக்கப்பட்டு மயிலுக்கு உயிரூட்டப்பட்டதாகவும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.



## முதலில் ஆகாயத்தில் பறந்தது எது?

லியனாடோ டாவின்சியின் சிந்தனை வெளியாகி வெகுகாலத்திற்குப் பின்னர் 1783 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சகோதரர்களான மொன்ட்டிகொல்ஃபியர் சகோதரர்கள் பெரிய பலூன் ஒன்றினை ஆகாயத்திற்கு அனுப்பியுள்ளனர்.



## க்ளைடர்

க்ளைடர் சாதனமானது, பலூனுக்குப் பின்னரே தயாரிக்கப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்திச் செலுத்தக்கூடியதாகவும் இருந்தது. 1891 இல் முதலாவது க்ளைடர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஒ(ட்)டோ லிலியென்த்தல் என்பவரால் உருவாக்கப்பட்டது. இதன் செலுத்துனராகவும் அவர் இருந்தார். 1896 இல் இது விபத்துக்குள்ளாகியதில் அவர் மரணமடைய நேர்ந்தது.



## முதன்முதலில் ஆகாயத்தில் சஞ்சரித்தவர்

முதன்முதலாக 1783 ஆம் ஆண்டு நொவெம்பர் 21 ஆம் திகதி ஒருவர் ஆகாயத்தில் சஞ்சரித்தார். அவர் பெயர் ஜீன் ஃபென்கொய்ஸ் பிளாட்ரே. இந்த சஞ்சாரத்தில் அவரது உதவியாளரான மாக்குவிஸ் எலன்டெஸ் என்பவரும் இணைந்து கொண்டார். வெப்பமான காற்று நிரப்பப்பட்ட பலூனே இதற்காகப் பயன்படுத்தப்பட்டது.



## ரைட் சகோதரர்கள்

என்ஜின் ஒன்றினூடாக, செலுத்தக்கூடிய விமானம் ஒன்றினை ரைட் சகோதரர்களே முதன் முதலாக உருவாக்கினர். அந்த விமானத்தினை அவர்கள் 1903 டிசம்பர் 17 ஆம் திகதி ஆகாயத்தில் 12 செக்கன்கள் வரை பறக்கவிட்டுள்ளனர்.




அதன்பின்னர், அவர்கள் 1904 இல் புதிய விமானம் ஒன்றினைத் தயாரித்தனர். அதனை 'ஃப்ளையர்-2' என்று அழைத்தனர். அந்த விமானம் 5 நிமிடங்களுக்கு மேல் ஆகாயத்தில் செலுத்தப்பட்டது. அந்த விமானத்தினை மேலும் முன்னேற்றி 1905 ஜூன்-ஒக்டோபர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் 30 நிமிடங்களுக்கு மேல் ஆகாயத்தில் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை ரைட் சகோதரர்கள் செய்திருந்தனர். இந்த விமானமே உரிய முறையில் ஆகாயத்தில் செலுத்தக்கூடிய விமானமாக வரலாற்றில் இடம்பிடித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விமானம் எவ்வாறு இயங்குகின்றது?

விமானங்கள் காற்றைவிட, நிறை அதிகமானவை. இதனால், அதனைத் தூக்கி உயரத்தில் செலுத்துவதற்கு மிகப் பெரும் சக்தி தேவை. விமானம் வேகமாக முன்னோக்கிச் செலுத்தப்படும்போது, அதன் இறக்கைகளின் ஊடாக, பின்னோக்கி இழுக்கப்படும் காற்றினால் விமானம் மேலே எழுவதற்கான சக்தியினைப் பெறுகின்றது. இறக்கைகளை ஊடுருவி பின்னோக்கித் தள்ளப்படும் காற்றினால் மேல் நோக்கிய அழுத்தம் ஒன்று பிரயோகிக்கப்படுகின்றது. இதனால், விமானம் மேலே செலுத்தப்படுகின்றது. இது நியூட்டனின் மூன்றாவது விதியாகும்







## ரைட் சகோதரர்களின் 'ஃப்ளையர் - 2'



இயந்திரம் - 12 குதிரை வலு நீர்க்குளிர்மையாக்கி
இறக்கைகளின் நீளம் - 12.3 மீற்றர்
விமானத்தின் நீளம் - 6.4 மீற்றர் (முகம் தொடக்கம் வால் பகுதிவரை)
உயரம் - 4.1 மீற்றர்
நிறை - 27 கிலோ கிராம்
அதிகபட்ச வேகம் - மணித்தியாலத்திற்கு 48.3 கி.மீற்றர்

## ரைட் சகோதரர்களின் 'ஃப்ளையர் -3'



இயந்திரம் - 20 குதிரைவலு 4 சிலிண்டர் குளிர்மையாக்கி.
இறக்கைகளின் நீளம் - 12.3 மீற்றர்.
அதிகபட்ச வேகம் - மணித்தியாலத்திற்கு 56 கி.மீற்றர்.
விமானத்தின் நீளம் - 8.5 மீற்றர் (முகம் தொடக்கம் வால் பகுதிவரை).
சாரதி - 1
பயணி - 1

## முதலாவது பெண் விமான ஓட்டுநர்



பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஹெலென் டுட்ரி என்ற பெண் மணியே, உலகின் முதலாவது பெண் விமான ஓட்டுநர். இவர் ஒரு சைக்கிளோட்டப் பந்தய வீராங்கனையுமாவார். 1910 இல் 45 கி.மீற்றர் தூரத்தினை 20 நிமிடங்களில் கடந்து சாதனையையும் அவர் நிகழ்த்தியுள்ளார்.

## முதலாவது தாக்குதல் விமானம்



அவுஸ்திரேலியாவின் 'டர்போ' தாக்குதல் விமானமே முதலாவது தாக்குதல் விமானமாகும். 1907 இல் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் உளவுப் பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. [illegible] உருவாக்கினர்.

## ஒலியின் வேகத்தினை தோற்கடித்த முதலாவது விமானம்

ஒலியின் வேகத்தை வெல்லும் விமானம் ஒன்றினைத் தயாரிப்பது ஆரம்பகாலங்களில் வெறும் கனவாகவே இருந்தது. 1947 ஒக்டோபர் 14 ஆம் திகதி இந்தக் கனவினை அமெரிக்க விமானப்படை நனவாக்கியது.



Bell X1 என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த அதிநவீன விமானம் பரீட்சார்த்த விமானமாகும். உலகின் அதிவேக விமானமான இந்த விமானத்தின் வேகம் மணித்தியாலத்திற்கு 1,609 கி.மீற்றர்களாகும்.

## முதலாவது பயணிகள் விமானம்

ரஷ்யரான இகோ சீக்ரொஸ்க்கி 1914 இல் உருவாக்கிய 'இல்யா முரோ மெஸ்ட்ஸ்' விமானமே உலகின் முதலாவது பயணிகள் விமானம் எனக் கருதப்படுகின்றது. இந்த ராட்சத விமானத்தினை பீற்றர்ஸ்பேக்கிலிருந்து கிவ் நகரம் வரை செலுத்தி மீண்டும் அதே இடத்திற்கு வருவதே அவரின் இலக்காக இருந்தது. பல்வேறு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவரது எதிர்பார்ப்பு இறுதியில் நிறைவேறியது. இந்த விமானத்தின் இறக்கைகள் இரண்டின் முடிவுகளுக்கு இடையிலான தூரம் 31 மீற்றராகும்.



இந்த விமானத்தில் கதகதப்புத் தரக் கூடிய பயணிகள் அறை, மின்சார வசதி மற்றும் மலசலகூட வசதிகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போயிங் விமானம்



போயிங் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட விமானமே இவ்வாறு அழைக்கப்பட்டது. 1916 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த போயிங் நிறுவனம் ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். பயணிகள் விமானங்களும் போர் விமானங்களும் இந்த நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றன.

## உலகின் மிகப் பெரியதும் நிறை அதிகமானதுமான விமானங்கள்



இது பொருட்களை ஏற்றி இறக்கும் விமானமாகும். 1980 இல் யுக்ரேனியாவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த விமானம் அன்டொனொவ் ஏஎன்-225 மரியா' (Antonov An-225 Mariya) என்று அழைக்கப்படுகின்றது.

## நீளமான ஆகாய விமானங்கள்

போயிங் 747-8 என்ற பெயரில் அழைக்கப்படும் இது ஒரு பயணிகள் ஜெட் விமானமாகும். போயிங் 747 ரகத்தினைச் சேர்ந்த நான்காவது சந்ததிக்குரிய இந்த விமானம் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சொந்தமானது.




## மிக வேகமான விமானம்




உலகின் மிக வேகமான விமானமாக, நாஸா நிறுவனத்தின் X43 விமானத்தினைக் குறிப்பிட முடியும். இதன் வேகம் மணித்தியாலத்திற்கு 11,265 கிலோமீற்றர்களாகும். இது ஒரு தானியங்கி ஆளில்லா விமானமாகும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய ராச்சியம்

பக்கிங்ஹம் மாளிகை (பிரித்தானிய அரச குடும்பத்தினரின் வாசஸ்தலம்)



**அரசு:** இரு சட்டசபைகளைக் கொண்ட நாடாளுமன்ற வரம்புடைய முடியாட்சி.

**ஸ்தாபிப்பு:** யூனியன் விதிகள் 1707 மே 01 ஆம் திகதி; யூனியன் விதிகள் 1800-1801 ஜனவரி 1 ஆம் திகதி; ஆங்கில-ஐரிஷ் அரசு 1922 ஏப்ரல் 12 ஆம் திகதி.

**தேசிய பெயர்:** பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்து ஐக்கிய ராச்சியம்.

**மகாராணி** (1952): இரண்டாம் எலிஸபெத்.

**பிரதமர்** (2010): டேவிட் கெமரூன்

**தாழ்மையம்:** மிகவும் தாழ்வான சதுப்பு நிலங்களைக்கொண்ட ஃபென்லாந்து.

**சனத்தொகை** (2010): 61,284,806.

**நாணயம்:** ஸ்டேர்லிங் பவுண்.

**மொழிகள்:** ஆங்கிலம், வேல்ஷ், ஸ்கொட்ஸ் கேலிக்.

**சமயங்கள்:** கிறிஸ்தவம்71.6%, இஸ்லாம் 2.7%, இந்து 1%, ஏனையவை 1.6%, மதம் சாராதவை 23.1%.

**இனக்குழுவினர்கள்** (2001): ஆங்கிலேயர் 83.6%, ஸ்கொட்டிஷ் 8.6%, வேல்ஷ் 4.9%, வட அயர்லாந்தியர் 2.9%, கறுப்பர் 2%, ஏனையோர் 5.9%.

**எழுத்தறிவு** (2003): 99%.

**இணையத்தள குறியீடு:** .uk

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 44

**தேசிய கீதம்**

God save our gracious Queen,
Long live our noble Queen,
God save the Queen:
Send her victorious,.. என ஆரம்பமாகின்றது.

## புவியியல்



ஐக்கிய ராச்சியத்தை 'பெரிய பிரித்தானியா' என பொதுவாக அழைப்பர். இதில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து ஆகிய நான்கு பகுதிகள் உள்ளடங்குகின்றன. பல முக்கிய நதிகள் நாட்டை ஊடறுத்துப் பாய்ந்து வட கடலில் சங்கமிக்கின்றன. அவற்றில் தேம்ஸ், டீஸ், டைன் ஆகிய நதிகள் முக்கியமானவை. நாட்டின் வட மேற்கே ஏரிகள் நிறைந்து காணப்படுகின்றன. பிரித்தானிய தீவையும் ஐரோப்பிய பெருநிலப்பரப்பையும் பிரிக்கும் ஆங்கிலக்கால்வாய் கப்பல் போக்குவரத்திற்குப் பெரிதும் உகந்ததாக உள்ளது.

**மொத்தப்பரப்பு:** 94,526 ச.மைல் (244,820 ச.கி.மீற்றர்).

**நிலப்பரப்பு:** 93,278 ச.மைல் (241,590 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** இங்கிலாந்து, வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவை ஏராளமான நகரங்களையும் கவுன்சில்களையும் மாகாணங்களையும் மாவட்டங்களையும் கொண்டுள்ளன.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** லண்டன்.

**ஏனைய பெரிய நகரங்கள்:** க்ளாஸ்கோ, பேர்மிங்ஹம், லிவர்பூல், எடின்பரோ, லீட்ஸ், பிரிஸ்டல், மெஞ்செஸ்டர், ப்ரட்ஃபோர்ட்.

**உயர்மலைச்சிகரம்:** பென் நெவிஸ் (1343 மீற்றர்).







## வரலாறு

பிரித்தானியாவின் பண்டைய வரலாற்றிற்கு முந்திய காலப்பகுதியை நினைவூட்ட 'ஸ்டோன்ஹென்ஜ்' உள்ளிட்ட சில வரலாற்று எச்சங்கள் உள்ளன. செல்டிக் எனும் இனத்தவர்கள் அதன்பின் இங்கு குடியேறினர். கி.மு. முதலாம் நூற்றாண்டில் ரோமானியர்கள் இந்நாட்டின்மீது படையெடுத்தனர். கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ரோமானியர்கள் இந்நாட்டிலிருந்து தமது படைகளை வாபஸ் பெற்றுச் சென்றனர். அதன் பின்னர் ஏங்கல்ஸ், செக்ஸன், ஜுட்ஸ் ஆகிய குழுவினரின் படையெடுப்பிற்கு இலகுவில் இரையாகியது. ஆனால், இப்படையெடுப்புகள் வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து பகுதிகளைப் பெரிதும் பாதிக்கவில்லை. அதன்பின் 'ஏழு பெரிய அங்கிலோ-செக்ஸன் பேரரசுகள்' தாபிக்கப்பட்டு 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐக்கியப்படுத்தப்பட்ட பிரித்தானிய ராச்சியங்கள் வெஸ்ஸெக்ஸ் மன்னர்களினால் ஆளப்பட்டன. 1801 இல் அயர்லாந்தும் கிரேட் பிரிட்டனும் இணைந்து 'பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்து ஐக்கிய பேரரசு' (United Kingdom of Great Britain and Ireland) உருவாகியது. 18 ஆம் நூற்றாண்டிலிருந்து பிரித்தானியா தனது கடற்படையை பெருக்கி ஆசியா, வட அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா என பல கண்டங்களில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளை தமது ஆட்சி அதிகாரத்தின்கீழ் கொண்டுவந்தது.


மகாராணி


பிரதமர்


தலைநகரின் ஒரு பகுதி


தேசிய இலச்சினை

## கலாசாரம்

ஐக்கிய ராச்சியத்தின் பூர்வீக வரலாறும் அதன் நிலையான ஆட்சியும் நாட்டின் அரசியல், பொருளாதாரம், படை பலம் என்பன நான்கு பகுதிகளாகிய இங்கிலாந்து, வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் ஆகியவற்றின் கலாசாரத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அத்தோடு, அவர்களின் மொழியும் வேறு பல கலாசார அம்சங்களும் புவியியல் ரீதியாக பல்வேறு நாடுகளில் தாக்கம் செலுத்தியுள்ளன.

## காலநிலை

ஐக்கிய ராச்சியத்தின் அனைத்துப் பகுதிகளும் ஓரளவு வெப்பத்துடனான இதமான பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. வடக்கே உயர்மலைகள் காணப்படும் பிரதேசங்களில் மாரியில் கடுங்குளிரும் பனிப்படிவு வீழ்ச்சியும் நிலவும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 32.943 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 61.1 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 219, FM 431, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1995): 228. **இணையத்தள வழங்குனர்கள்** (2006): 6.1 மில்லியன்; இணையத்தளப் பாவனையாளர்கள்: 37.6 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2005): மொத்தம் 17,156 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2005): மொத்தம் 388,008 கி.மீற்றர். **நீர்வழிப்போக்குவரத்து:** 3200 கி.மீற்றர். **சில துறைகளும் துறைமுகங்களும்:** அபர்டீன், பிரிஸ்டல், கிளாஸ்கோ, கிரேங்மௌத், லிவர்பூல், லண்டன், மெஞ்செஸ்டர், பிளைமௌத், போர்ட்ஸ்மௌத், சவுத்ஹம்டன். **விமான நிலையங்கள்** (2006): 471.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 23%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நவதானியங்கள், எண்ணெய் விதை, கிழங்குவகைகள், மரக்கறிவகைகள், ஆடு, மாடுகள், செம்மறியாடு, கோழிப்பண்ணை, மீன். **கைத்தொழில்கள் சில:** மின்சக்தி உபகரணங்கள், கப்பல் கட்டும் தொழில், வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், இலத்திரனியல் சாதனங்கள், பெற்றோலியம், உணவுற்பத்தி, புடவை. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, உலோகங்கள், பயிர்ச்செய்யக்கூடிய வளமிகு நிலம். **ஏற்றுமதிகள்** (2009): உற்பத்திப் பொருட்கள், எரிபொருள், ரசாயனப் பொருட்கள், உணவு வகைகள், புகையிலை. **இறக்குமதிகள்** (2009): உற்பத்திப் பொருட்கள், இயந்திரங்கள், எரிபொருட்கள், உணவு உற்பத்திப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2009): ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், அயர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெய்ன், இத்தாலி, சீனா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- London Eye
- ஸ்டோன்ஹென்ஜ்
- பிக் பென்
- மெடம் டுஸோட் அருங்காட்சியகம்

London Eye



பிரித்தானிய நாடாளுமன்றம் (வெஸ்மின்ஸ்டர் மாளிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமாத்ராவின் காண்டா மிருகங்கள் அழிந்து போகுமா?

அடர்ந்த காடுகளில் மறைந்து வாழும் உலகிலேயே மிகச் சிறிய காண்டா மிருகங்கள் அழிந்து போகும் அபாயத்தில்....



காண்டா மிருகங்களின் குடும்பத்தில் மிகச் சிறிய அங்கத்தவர்களாக 'சுமாத்ரா ரைனோ' (Sumatra Rhino) என அழைக்கப்படும் சுமாத்ரா காண்டா மிருகங்கள் உள்ளன. தென்கிழக்கு ஆசியாவிலேயே இந்த மிருகங்கள் வாழ்கின்றன. அந்தவகையில், உலகில் மலேசியா, சுமாத்ரா, போனியோ ஆகிய நாடுகளில் மாத்திரமே இவை காணப்படுகின்றன. இந்த நாடுகளைத்தவிர, உலகின் வேறு எப்பகுதியிலும் இந்த மிருகங்கள் காணப்படுவதில்லை. அதிலும் போனியோவில் வாழும் சுமாத்ரா ரைனோவின் ஒரு தனித்துவ உப பிரிவே விசேடத்துவம் மிக்க காண்டா மிருகம் என விஞ்ஞானிகளால் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. எனினும், துரதிர்ஷ்டவசமாக, இச்சின்னஞ்சிறிய சுமாத்ரா காண்டா மிருகங்கள் வேகமாக அழிந்துவரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. சர்வதேச வனவிலங்குகள் பாதுகாப்பு அமைப்பானது, புதிதாக வெளியிட்டுள்ள தனது அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது. இதன்படி, அவர்களின் 'செந்தரவு' அறிக்கையில் சுமாத்ரா காண்டாமிருகங்களைச் சேர்க்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது.

அனேகமாக, உலகில் நான்கு வகையான காண்டா மிருகங்கள் இருக்கின்றன. அவையாவன: இந்திய ராட்சதக் காண்டா மிருகம், ஜாவா காண்டா மிருகம், ஆபிரிக்காவில் காணப்படும் மிக அரிதான வெள்ளை நிறக் காண்டா மிருகம் மற்றும் சுமாத்ரா காண்டா மிருகம் என்பனவாகும். பொதுவாகப் பார்க்கும்போது மேற்குறித்த அனைத்துக் காண்டா மிருகங்களும் அழிந்துவரும் அபாய நிலைக்கே முகம் கொடுத்து வருகின்றன. மனிதர்கள் அதிகளவில் இக்காண்டா மிருகங்களை வேட்டை ஆடுவதே இவற்றின் அழிவிற்கு பிரதான காரணமாகும். எனினும், ஏனைய காண்டா மிருக வகைகளைப் போலன்றி, சுமாத்ரா காண்டா மிருகமானது, மிக விரைவாக அழிந்து வருவதோடு, அவற்றின் தொகையும் மிக வேகமாகக் குறைந்தே வருகின்றது.

புல், பூண்டுகளையும் மாத்திரமே உணவாக உட்கொள்ளும் சுமாத்ரா காண்டா மிருகம் தோற்றத்திலும் ஏனைய காண்டா மிருகங்களைவிட, வேறுபட்டே காணப்படுகின்றது. சுமாத்ரா காண்டா மிருகங்கள் குட்டிகளாக இருக்கும்போது, அதன் உடலின் மேற்பகுதியில் உரோமங்கள் காணப்படும். எனினும், ஏனைய வகைக் காண்டா மிருகங்களிடம், அவ்வாறு உடலில் உரோமங்கள் இருப்பதில்லை. அத்தோடு, இரு கொம்புகளையுடைய ஒரே ஆசிய காண்டா மிருகமாகத் திகழ்வது இந்த சுமாத்ரா காண்டா மிருகம்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலும் நேபாளத்திலும் காணப்படும் இந்திய ராட்சதக் காண்டா மிருகங்களுக்கும் ஜாவா தீவுகளில் வாழும் ஜாவா காண்டா மிருகங்களுக்கும் ஒரே ஒரு கொம்பு மாத்திரமே இருக்கின்றது. (-அ)








### சுமாத்ரா காண்டா மிருகங்கள்

உலகிலேயே மிகச் சிறிய காண்டா மிருக வகைதான் ஆசியாவில் உள்ள இரு கொம்புகளையுடைய காண்டா மிருக வகையாகும்.

இவை விதை வகைகளையும் இலை குழைகளையும் மரங்களின் பட்டைகளையும் உணவாக உட்கொள்கின்றன.

அடர்ந்த காடுகளில் மட்டுமே வாழ்கின்றன.

நீளம்: 2 -3 மீற்றர்
அகலம்: 1-1.5 மீற்றர்
நிறை: 600-950 கிலோ கிராம்.

- கடல் மட்டத்திலிருந்து உயரமான வெப்ப வலய அடர்ந்த மழைக்காடுகளிலேயே இவை வாழ்கின்றன.
- சுமாத்ராவிலும் போனியோவிலும் மலேசியா குடாநாட்டிலும் இவற்றைக் காணலாம்.
- காடுகளில் சுமார் 200 காண்டா மிருகங்களே வாழ்கின்றன.


### போனியோ விசேட உபபிரிவுக் காண்டா மிருகம்

- 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, போனியோ வகைக் காண்டா மிருகங்கள் 13 மாத்திரமே வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. 2005 இற்கு முன்பதாக இவற்றின் தொகை 50 வரை இருந்துள்ளது.

ICUN - செந்தரவு அறிக்கையின்படி, அழிந்துபோகும் ஆபத்தை எதிர்நோக்கும் மிருகமாக இது காணப்படுகின்றது

180210 AFP

புல், பூண்டுகளையும் புதர்களையும் மாத்திரமே உணவாக உட்கொள்ளும் சுமாத்ரா காண்டா மிருகமானது, தோற்றத்தில் ஏனைய காண்டா மிருகங்களைவிட, வேறுபட்டே காணப்படுகின்றது. சுமாத்ரா காண்டா மிருகங்கள் குட்டிகளாக இருக்கும் போது, அதன் உடலின் மேற்பகுதியில் உரோமங்கள் காணப்படும். எனினும், ஏனையவகை காண்டா மிருகங்களிடம் அவ்வாறு உடலில் உரோமங்கள் காணப்படுவதில்லை. அத்தோடு, இரு கொம்புகளையுடைய ஒரே ஆசிய காண்டா மிருகமாகத் திகழ்வது இந்த சுமாத்ரா காண்டா மிருகம்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ........................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

*எண்ணற்ற வண்ணமாம் மீன்களா- கடல்*
*ஏரி குளங்களில் நீந்துதடா*
*கண்ணுக்கு நல்லழகென்று தம்பி - தொட்டி*
*கட்டியும் வீட்டில் வளர்ப்பாரடா*

*மின்னும் ஒளிக்கீற்று அசைவது போல் - சிறு*
*மீன்கள் தடாகத்தில் நீந்துதடா*
*பொன்னும் பொருட்களும் தேடாமல் - நீருள்*
*புகுந்து மிதந்தவை போகுதடா*

*ஆழி நதிகள் குளங்களிலும் - அவை*
*அமிழ்ந்து அழகுற நீந்துதடா*
*வாழத்துடிக்கும் மனிதருக்கே - தமை*
*வழங்கியே நல்லுணவு ஆகுதடா*

01. மீன்கள் வாழும் இடங்கள் எவை? ..........
02. வீட்டில் மீன்கள் எவற்றில் வாழ்கின்றன? ..........
03. இப்பாடலில் வரும் அஃறிணை பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ..........
04. இங்கு காணப்படும் இணைமொழி ஒன்று எழுதுக. ..........
05. இப்பாடலில் உள்ள உவமைச் சொல் ஒன்று எழுதுக. ..........
06. 'ஆழி' என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ..........
07. இப்பாடலில் வரும் உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ..........
08. இங்கு காணப்படும் எழுவாய் அடைமொழி ஒன்று எழுதுக. ..........
09. மீனின் இளமைப் பெயரை எழுதுக. ..........
10. 'நல்லுணவு' என்பதைப் பிரித்து எழுதுக. ..........

02) பேச்சு வழக்கு நடையை எழுத்து வழக்கு நடையாக மாற்றி எழுதுக.

1. நான் வீட்டை போட்டு வாறன் ..........
2. அவன் சட்டை வேண்டினான் ..........

03) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

1. மாரிகாலத்தில் கடுமையான மழை பெய்யும்போது, மின்னலின் ................ யையும் இடியின் ...................... யையும் அவதானிக்கின்றோம். (ஒலி, ஒளி, ஒழி)
2. சூறா ...................... பலமாக வீசியதால் நாம் சென்ற ...................... அருகே நின்ற தென்னைமரம் சரிந்து விழுந்தது. (வலி, வழி, வளி)

04) பின்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.

1. கை கொடுத்தல் ..........
2. வாய் காட்டுதல் ..........

05) கீழுள்ள நிகழ்கால வாக்கியங்களை எதிர்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. குமார் படிக்கிறான் ..........
2. பறவைகள் பறக்கின்றன ..........

06) பின்வரும் பந்திக்குப் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.

நல்லது பிள்ளைகளே உங்கள் வீட்டில் உங்கள் அனைவரையும் காணவில்லை என்று தேடுவார்கள் எல்லோரும் உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள் என முதியவர் கூறினார்

07) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் உரிய பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

1. கரும்பலகை..........
2. வானொலி..........
3. நீர்வீழ்ச்சி..........

08) கருத்தினைத் தமிழில் எழுதுக.

1. Clean the classroom - ..........
2. Open the window - ..........
3. Close your book - ..........

09) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சிங்களச் சொல்லின் கருத்தையும் தமிழில் எழுதுக.

1. கிரவா: .......... 2. பஹலவ: ..........

10) தமிழ் சொல்லுக்குரிய சிங்களச் சொல்லை தமிழில் எழுதுக.

1. நாய் ..........
2. சிங்கம் ..........

★ ***பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் உரிய புள்ளிக்கோட்டில் அடையாளமிடுக.***

11) தக்காளி தவான் இட்டுக் கன்றுகளைப் பெற்றுக்கொள்ளும் தாவரமாகும். (..........)




12) பல்லி நீர் அருந்துவதே இல்லை. (..........)
13) இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சி பம்பரகந்த. (..........)
14) திமிங்கிலத்தின் வாயில் சுவை நரம்புகள் இல்லை. (..........)
15) குயில்கள் குளிர்காலத்தில் கூவுவது இல்லை. (..........)

★ ***16 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடையின்கீழ்க் கீறிடுக.***

16) பண்டைய மனிதன் தீயைப் பெற்ற வழி எது?

1. மின்சாரத்தின்மூலம் 2. தீப்பெட்டிமூலம்
3. இரும்பாணியை உரசி 4. கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி

17) உணவை முழுமையாக விழுங்கும் பிராணி எது?

1. நுளம்பு 2. பாம்பு 3. ஆடு 4. வண்ணத்துப்பூச்சி

18) தான் செல்லும் இடமெல்லாம் தன்னோடு வாழ்விடத்தைக் கொண்டுசெல்லும் பிராணி;

1. யானை 2. பல்லி 3. நத்தை 4. எறும்பு

19) விவசாயிகள் வேளாண்மையின் அறுவடைக்காலத்தை அறிந்துகொள்ளும் விதம்;

1. நெற்கதிருக்கு அடுத்திருக்கும் இலை சிவப்பு நிறமாகிய பின்
2. நெல் மணிகளை உடைத்துப் பார்த்து
3. நெற்கதிருக்கு அடுத்திருக்கும் இலை மஞ்சள் நிறமாகிய பின்
4. நெற்கதிர் மஞ்சள் நிறமாகிய பின்

20) இலங்கையின் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்;



21)  இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் சின்னத்தின் மஞ்சள் நிற வளையம் குறிக்கும் கண்டம்;

1. ஐரோப்பாக் கண்டம் 2. ஆபிரிக்காக் கண்டம்
3. அமெரிக்காக் கண்டம் 4. ஆசியாக் கண்டம்

22) எல்லாக் காலங்களிலும் பூக்கும் பூ எது?



23) துவிச்சக்கரவண்டியின் பொருத்தமற்ற பயன்பாடு;

1. எரிபொருள் தேவையின்மை 2. சூழலை மாசடையச் செய்யும்
3. எளிய பராமரிப்பு 4. உடற்பயிற்சியாக அமைதல்

24) தோசம் நீக்கிக்கொள்வதற்காக 'பிரித் ஓதிய நீர்' தெளித்தல்;

1. இந்துக்களின் சம்பிரதாயம் 2. முஸ்லிம்களின் சம்பிரதாயம்
3. பௌத்தர்களின் சம்பிரதாயம் 4. கிறிஸ்தவர்களின் சம்பிரதாயம்

25) கஞ்சக் கருவி எது?



26)  இவ்வுருவின் ஆக்கத்திற்குப் பயன்படுத்திய சரியான சித்திர வகை;

1. ஸ்ரென்சில் அச்சுப்பதிப்பு 2. கொலாஜ் சித்திரம்
3. கிறுக்கல் சித்திரம் 4. ரெம்ளற் அச்சுப்பதிப்பு

27) கீழே உருக்களால் காட்டப்பட்டுள்ள விளையாட்டுக்களை இனங்கண்டு அவற்றின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| கரம் | ஹொக்கி | கரப்பந்து | மேசைப்பந்து |



1. .......... 2. .......... 3. .......... 4. ..........

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் ஆமைகள் பற்றி அறிவீர்களா?



கடல் வாழ் உயிரினங்களில் மிகப் பழைய உறுப்பினராக இந்த கடல் ஆமைகள் திகழ்கின்றன.கடல் ஆமைக்கு மிக நீண்ட வரலாறு இருக்கின்றது. அதன்படி, சுமார் 10,65,000-1,1400,000 வருடங்களுக்கு முன்னரான 'மெசசொய்க்' யுகத்திற்கு உரித்தான ஓர் உயிரினமாகவே கடல் ஆமை கருதப்படுகின்றது. 'டைனோசர்' யுகத்தில் இருந்து அண்மைக்காலம் வரையில் பாரிய சமூகமாக இவை வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. கடல் ஆமையானது 'ரெப்டீலியா' (Reptelia) வகையைச் சேர்ந்த ஓர் உயிரினமாகும். விலங்கியல் வகைப்படுத்தலின்படி ஊர்ந்து செல்லும் உயிரின வகையே 'ரெப்டீலியா' எனப்படுகின்றது.இன்று அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு இந்த ஆமையினம் முகம் கொடுத்து வருகின்றது. எனவே, ஆமை இனத்தின் ஓர் உறுப்பினரான கடல் ஆமைகள் பற்றி அறிந்துகொள்வோம்

## கடல் ஆமையின் இயல்புகள்

* ஊர்வன குடும்பத்தைச் சேர்ந்த கடல் ஆமையானது, சூழல் வெப்பநிலைக் குருதியுடைய ஓர் உயிரினமாகும். இத்தகைய உயிரினங்களின் உடல் வெப்பநிலையானது, சூழலில் நிலவும் வெப்பத்தைக்கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

* பெரும்பாலான கடல் ஆமைகள் மிகவும் திறமையாக நீந்தக்கூடியன. இதற்கேற்ற உடல் அமைப்பை கடல் ஆமைகள் கொண்டுள்ளன.

* கடல் ஆமைகள் பொதுவாக, சமுத்திர நீரிலேயே வாழ்கின்றன. முட்டையிடுவதற்கு மாத்திரமே அவை தரைப்பகுதிக்கு வருகின்றன.

* இவை பெரும்பாலும் ஒரே பிரதேசத்தி லேயே முட்டைகளை இடுகின்றன. அதாவது, ஒருமுறை முட்டையிட்ட கடற்கரையையே அடுத்த முறையும் முட்டையிடுவதற்காக தெரிவு செய்கின்றன.

* கடல் ஆமைகளுக்கு பற்கள் இல்லை. மாறாக, கூர்மையான ஒரு சோடி தாடை எலும்புகள் மட்டுமே அமைந்துள்ளன. அவற்றின் உதவியோடுதான் கடல் ஆமைகள் தமது உணவை கிழித்தும் தூளாக்கியும் அரைத்தும் விழுங்குகின்றன.

* இவற்றின் ஆயுட்காலத்தை சரிவரக் கூற முடியாது. எனினும், கடல் ஆமையொன்று சுமார் 80 முதல் 100 வருடங்கள் வரையான ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும் என கடல் வாழ் உயிரின விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

* கடல் ஆமைகள் நீருக்கடியில் இருக்கும் போது, மூச்சை உள்ளே எடுப்பதும் வெளியே விடுவதும் நுரையீரல் வாயிலாகும். அதனால் உணவு உண்ணும்போது, 5-15 நிமிடங் களுக்கு ஒரு முறை நீரின் மேற்பரப்புக்கு வருகின்றன. இவை இரவு முழுவதும் கடலுக் கடியில் ஒதுக்கமான இடங்களில் உறங்கு கின்றன.

## உடல் அமைப்பு

கடல் ஆமைக்கு தலை, சிறிய கழுத்து, வால், நீந்துவதற்கு இரண்டு ஜோடி துடுப்புக்கள் உள்ளன. மேலோடு மற்றும் கீழ் ஓடு என அமைந்துள்ள பெட்டி போன்ற அமைப்பிற்குள் உடலின் ஏனைய அவயவங்கள் அமைந்துள்ளன. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஆமைகளைப் போன்று, கடல் ஆமைகளால் தமது கால்களையும் தலையையும் ஓட்டுக்குள் இழுத்து மறைத்துக்கொள்ள முடிவதில்லை.

(12,13 ஆம் பக்கங்களைப் பார்க்க)



## கடல் ஆமையின் விபரங்கள்

| | |
|---|---|
| ராச்சியம்: | விலங்கினம் (Animalia) |
| வம்சம்: | கோர்டேடா (Chordata) |
| வகை: | ஊர்வன (Reptilia) |
| கோத்திரம்: | ச்செலொனியா (Chelonia) |
| குலம்: | டேர்மொச் செலிடே (Dermochelidae) |
| | ச்செலோனிடே (Chelonidae) |

இவற்றில் இரு வேறு குலத்தைச் சேர்ந்த 7 வகையான கடல் ஆமைகள் உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் 5 வகையான கடல் ஆமை வகைகள் உயிர்வாழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடல் ஆமை பற்றி அறிவீ

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## முட்டை இடுவதற்கே கரைக்கு வருகின்றன





ஆழகடலில் வாழும் பெண் கடல் ஆமைகள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள ஒரு கடற்கரையை நோக்கி முட்டை இடுவதற்காக வருகின்றன. அவை பெரும் கூட்டமாக அல்லது சிறிய குழுக்களாக வந்து பெரும்பாலும் ஒரே பிரதேசத்திலேயே முட்டைகளை இடுகின்றன. அதாவது, ஒருமுறை முட்டையிட்ட கடற்கரையையே அடுத்த முறையும் முட்டையிடுவதற்காக தெரிவு செய்கின்றன. முட்டையிடவுள்ள கரையை அண்மித்த கடலில் குறித்த கடல் ஆமை இரவாகும் வரை காத்திருக்கும். இரவானதும் கடற்கரைக்குச் சென்று, தெரிவு செய்த இடத்தில் தனது உடல் நிலத்தில் பதிவதற்கு ஏற்றவாறு முன்னங்கால்களால் குழி ஒன்றைத் தோண்டி, பின்னர் அந்தக் குழிக்குள் தனது பின்னங்கால்களால் கோப்பை வடிவில் குழியொன்றையும் தோண்டிக்கொள்ளும்.

இவ்வாறு முட்டையிடுவதற்கெனத் தோண்டும் குழி 'முட்டைக் கூடு' என அழைக்கப்படுகின்றது. இந்த முட்டைக் கூடானது 50 முதல் 70 சென்றிமீற்றர் அளவு ஆழத்தில் இருக்கும். இத்தகைய அளவுடைய கூட்டில் சுமார் 120 முட்டைகளை இடும். பெரும்பாலான கடல் ஆமை வகைகளின் முட்டையொன்றின் அளவும் தோற்றமும் மேசைப் பந்தொன்றைப் போல் இருக்கும். இந்த முட்டையின் கோது மிகவும் மென்மையானது. முட்டையிட்டு முடிந்தபின்னர் பெண் கடல் ஆமை அதன் முன்னங்கால்களால் மணலை வீசி முட்டைக் கூட்டை மூடிவிடும்.முட்டைகளை மணல் போட்டு மூடிய பின்னர் அது மீண்டும் கடலுக்குள் சென்றுவிடும். இந்த முட்டைகள் சூரிய வெப்பத்தால் மணல் சூடாகும்பொழுது இயற்கையாகவே அடைகாக்கப்பட்டு, இரண்டு மாதங்களில் அதாவது, 60 நாட்களில் பொரித்து குஞ்சுகளாக வெளிவருகின்றன.



## இலங்கையில் காணக்கிடைக்காத கடல் ஆமை வகைகள்

### 1 கெம்ப்ஸ் சேற்றுக் கடல் ஆமை

- ஆங்கிலப் பெயர்: Kemp's Ridley Turtle.
- விலங்கியல் பெயர்: *Lepidochelys kempii*.

உலகம் முழுவதும் சுமார் 2,000 அளவிலான கெம்ப்ஸ் சேற்றுக் கடல் ஆமைகள் உள்ளதாக கணிப்பீடுகள் கூறுகின்றன.

### 2 தட்டைக் கடல் ஆமை

- ஆங்கிலப் பெயர்: Flatback Turtle.
- விலங்கியல் பெயர்: *Natator depressus*.

வளர்ச்சியடைந்த தட்டைக் கடல் ஆமையொன்று சுமார் 90 செ.மீற்றர் அளவு நீளம் உடையதாகக் காணப்படும். 70 கிலோகிராம் வரையான நிறையைக் கொண்டிக்கும். உலகில் அரிதாகக் காணக்கூடிய கடல் ஆமை வகைகளில் இதுவும் ஒன்றாகும். இவை அவுஸ்திரேலிய கடற்கரையில் முட்டைகளை இடுகின்றன. குவின்ஸ்லாந்திலிருந்து கடற்பரப்பிலும் 'டோர்ஸ்' நீரிணைக்கு அருகிலும் அதிகளவில் வாழ்கின்றன. இவை கடற்தாவரங்களையும் கணவாய்களையும் உணவாகக்கொள்கின்றன.


### 3 கறுப்புக் கடல் ஆமை

- ஆங்கிலப் பெயர்: Black Turtle
- விலங்கியல் பெயர்: *Chelonia agassizii*

கல் கடல் ஆமையின் உப பிரிவாகக் கறுப்புக் கடல் ஆமை கருதப்படுகின்றது. இவை பசுபிக் சமுத்திரத்தில் அதிகளவில் வாழ்கின்றன.



முன்னங் கால்களால் பின்புறமாக மணலை வீசி அடித்தபடி, முட்டைக் கூட்டை மூடும் பெண் கடல் ஆமை



01 கெம்ப்ஸ் சேற்றுக் கடல் ஆமை

02 தட்டைக் கடல் ஆமை

03 கறுப்புக் கடல் ஆமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மகள் ...ரிகளா?






## குஞ்சுகளின் பிறப்பு

60 நாட்களின் பின்னர் முட்டைகளில் இருந்து வெளிவரும் கடல் ஆமைக் குஞ்சுகள் இரண்டு நாட்களுக்கு முட்டைக் கூட்டுக்குள்ளேயே உயிர் வாழும். அப்போது, அவை கூட்டுக்குள் அங்கும் இங்கும் செல்வதால், ...் அசைவின் காரணமாக, கூட்டின் மேற்பகுதியிலும் இருபக்கங்களிலும் உள்ள மணல் அதன் அடிப்பகுதியில் விழுந்து நிறையும். இதனால், கூட்டுக்குள் உள்ள ஆமைக் குஞ்சுகள் இயல்பாகவே, மேலே வந்து வெளியேறும்.எவ்வாறாயினும், இந்த கடல் ஆமைக் குஞ்சுகள் இரவு வேளைகளிலேயே கூட்டில் இருந்து வெளியே வரும்.பின்னர், கடல் நீரின் மீது விழுகின்ற நிலவொளியின் ஆதரவுடன், மிக வேகமாக கடலை நோக்கி ஓடும். இவ்வாறு கடலை நோக்கிச் செல்லும் குஞ்சுகள், நண்டுகள் மற்றும் கடல் பறவைகள் போன்ற உயிரினங்களின் தொல்லைகளுக்கு இலக்காகும் வாய்ப்புகள் அதிகமுள்ளன. அவ்வாறே, கடலுக்குள் சென்ற பின்னர் அங்கு வாழும் பெரிய மீன்களாலும் ஏனைய கடல் வாழ் உயிரினங்களாலும்கூட இந்த சின்னஞ்சிறு குஞ்சுகளுக்கு ஆபத்துக்கள் ஏற்படும். எவ்வாறாயினும், இந்த ஆபத்துக்களையும் தாண்டி அவை தொடர்ச்சியாக 48 மணித்தியாலங்களுக்கு கடலில் நீந்திச் செல்லும். கடல் ஆமைக் குஞ்சுகள் வளர்ச்சியடைந்து பருவமடைய 30 ஆண்டுகள்வரை செல்லும்.

## ஆணா? பெண்ணா? வேறு பிரித்தறிவது எவ்வாறு?

சிறுபராய கடல் ஆமையொன்றை ஆணா? பெண்ணா? எனப் பிரித்தறிந்துகொள்வது மிகவும் சிரமமானதாகும். வளர்ச்சி அடைந்த ஆண் கடல் ஆமைக்கு முன்னங்கால்களில் நீளமான நகங்களும் பெண் கடல் ஆமையைவிட ஓரளவு நீளமான வால் ஒன்றும் காணப்படுகின்றது. இத்தகைய வேறுபாடுகளை வைத்தே கடல் ஆமைகளில் ஆண், பெண் இனங்களை பிரித்தறிந்துகொள்ளலாம்.



## இலங்கையில் காணக்கிடைக்கின்ற கடல் ஆமை வகைகள்

### 1 கல் கடல் ஆமை

இதனை மணல் கடல் ஆமை என்றும் அழைக்கின்றனர்.

- ஆங்கிலப் பெயர்: Green Turtle.
- விலங்கியல் பெயர்: *Chelonia mydas.*

இது சுமார் ஒரு மீற்றர் அளவு நீளமும் 200 முதல் ... கிலோகிராம் வரையான நிறையையும் கொண்டுள்ளது. இந்தியாவின் உலர் கடற்கரைப் பிரதேசங்களிலும் அட்லாண்டிக் சமுத்திரம் மற்றும் பசுபிக் சமுத்திரத்திலும் இவை அதிகம் காணப்படுகின்றன.

### 2 சேற்றுக் கடல் ஆமை

- வேறு பெயர்கள்: பறை கடல் ஆமை, கிளி அலகு.
- ஆங்கிலப் பெயர்: Olive Ridley Turtle.
- விலங்கியல் பெயர்: *Lepidochelys olivacea.*

கிளியின் அலகைப் போன்ற அலகு இருப்பதால் இந்த வகை கடல் ஆமைகளை 'கிளி அலகு' என்றும் அழைக்கின்றனர். இந்த வகைக் கடல் ஆமையொன்றின் நிறை 50 கிலோகிராம் ஆகும். நீளம் 75 சென்ரிமீற்றரிலும் குறைவு. இவை பெரும்பாலும் ஆழமற்ற கடலிலேயே வாழ்கின்றன. இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், கொஸ்டாரிகா, நிக்கரகுவா, எல் சல்வடோர், ஹொண்டியுராஸ் ஆகிய நாடுகளின் கரையோரப் பிரதேசங்களில் முட்டை இடுவதற்காக இவை வருகின்றன.

### 3 வெளவால் கடல் ஆமை

- வேறு பெயர்கள்: எண்ணெய்க் கடல் ஆமை, கப்பல் கடல் ஆமை, மாவல்லா.
- ஆங்கிலப் பெயர்: Leatherback Turtle.
- விலங்கியல் பெயர்: *Dermochelys coriacea.*

பெருமளவில் காணக்கிடைக்கின்ற கடல் ஆமை வகை இதுவாகும். இது உருவத்தில் மிகப்பெரியது. இதன் நன்கு வளர்ச்சி அடைந்த ஆமை ஒன்றின் நிறை 600 முதல் 700 கிலோகிராம் வரை காணப்படும். அதன் நீளம் சுமார் 3 மீற்றர் அளவு இருக்கும். இவை, வெப்பமான கடலையே மிகவும் விரும்புகின்றன. எனினும், இரை தேட சிரமமாகும் சந்தர்ப்பங்களில் 4000 கிலோமீற்றர் தொலைவில் உள்ள 'ஆர்க்டிக்' குளிர் கடல் வலயம் வரை நீந்திச் செல்லும் சந்தர்ப்பங்களும் உண்டு.மத்தியதரைக்கடல் பிரதேசம், அட்லாண்டிக் சமுத்திரம், பசுபிக் மற்றும் இந்து சமுத்திரம் ஆகிய வலயங்களிலேயே, இவை அதிகம் காணப்படுகின்றன.

### 4 பட்டைக் கடல் ஆமை

- வேறு பெயர்கள்: பருந்து அலகு, கோழி கடல் ஆமை
- ஆங்கிலப் பெயர்: Hawksbill Turtle.
- விலங்கியல் பெயர்: *Eretmochelys imbricata.*

ஆமைக் குடும்பத்தின் அழகிய உறுப்பினர் பட்டைக் கடல் ஆமையாகும். இது 90 செ.மீற்றர் அளவு நீளமானது. 50 கிலோகிராமிலும் குறைந்த அளவு நிறையுடையது. மிகவும் சக்தி வாய்ந்த அலகைக் கொண்டிருப்பதால், இதனிடம் சிக்குகின்ற எந்த உயிரினமும் இலகுவில் தப்பமுடியாது.

இந்து சமுத்திரத்திலும் பசுபிக் சமுத்திரத்திலும் அதிகம் காணப்படுகின்றன. இலங்கையைத் தவிர சீசெல்ஸ் தீவுகள், பபுவா நியூகினியா தீவு, மேற்கிந்திய தீவுகள், சொலமன் தீவுகள் போன்ற கரையோரங்களுக்கு முட்டையிடுவதற்காக வருகின்றன. விஷத்துடன்கூடிய கடற் தாவரங்களையும் இவை இரையாகக்கொள்வதால், இதனை உணவாகக்கொள்பவர்களுக்கு கடும் விஷம் காரணமாக உயிரிழப்பு ஏற்படலாம்.

### 5 கண்ணாடிக் கடல் ஆமை


இதனைப் 'பெருந்தலை கடல் ஆமை' என்றும் அழைப்பர்.

- ஆங்கிலப் பெயர்: Logger head Turtle.
- விலங்கியல் பெயர்: *Caretta caretta gigas.*

இவை மிகப்பெரிய தலையை உடையவை. இதன் நீளம் சுமார் 1 மீற்றராகும். அதன் நிறை சுமார் 180 கிலோகிராம் ஆக இருக்கும். இவை செங்கடலில் பெருமளவில் வாழ்கின்றன. வளைகுடா, இந்தியாவின் மேற்குக் கடல், மொசம்பிக் நாட்டின் மேற்குக்கரை, மடகஸ்காரின் தென்பகுதிக்கரை, அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள ரெக் தீவு, கியூபாவுக்கருகில் உள்ள கடல் பகுதி என்பன கண்ணாடிக் கடல் ஆமைகள் அதிகம் வாழும் ஏனைய வலயங்களாகும். இக்கடல் ஆமையின் இறைச்சி மனிதன் உண்பதற்கு உகந்ததன்று.

(14 ஆம் பக்கம் பார்க்க)


05 கண்ணாடிக் கடல் ஆமை


01 கல் கடல் ஆமை

02 சேற்றுக் கடல் ஆமை

03 வெளவால் கடல் ஆமை

04 பட்டைக் கடல் ஆமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் ஆமைகள் பற்றி அறிவீர்களா?

(12,13 ஆம் பக்கங்களின் தொடர்ச்சி)

## கடல் ஆமைகள் உலகிலிருந்து விடைபெறுமா?

கடல் ஆமைகள் தற்போது அதிகளவில் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. இயற்கையான காரணிகளும் முறையற்ற மானிட செயற்பாடுகளுமே, கடல் ஆமைகளின் அழிவுக்கு முக்கிய காரணமாக அமைகின்றன.

## இயற்கைச் சூழலால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்

முட்டை இட்டு-குஞ்சு வெளியாகி அவை கடலில் சுயமாக வாழப்பழகும் வரையில் ஏனைய உயிரினங்களால் கடல் ஆமைகள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றன. குஞ்சுகளாக இருக்கும்போதே, பிற கடல்வாழ் உயிரினங்களுக்கு இரையாகும் வாய்ப்பு மிக அதிகம் என்பதால், ஆரம்ப கட்டத்திலேயே அவை அழிந்துவிடும் நிலை காணப்படுகின்றது. அதேபோன்று, நன்கு வளர்ந்த பருவத்திலும் சுறா மற்றும் திமிங்கிலங்களுக்கு இவை இரையாகின்றன. குஞ்சுகளாக கடலை அடையும் வரையில் கடற் பருந்து, காகம், உடும்பு, நரி போன்றவற்றுக்கு இரையாகின்றன. இவ்வாறாக இயற்கைச் சூழலில் ஏற்படும் அச்சுறுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள கடல் ஆமைகள் பெரும் போராட்டம் நடத்துகின்றன.



## முட்டையும் இறைச்சியும்

கடல் ஆமை முட்டையும் இறைச்சியும் உடல் நலத்திற்குச் சிறந்தது என்றும் போஷாக்கு மிக்கது என்றும் சில நாடுகளில் வாழும் மக்கள் கருதுகின்றனர். எனினும், கடல் ஆமை இறைச்சியில் கொலஸ்ட்ரோல் அதிகம் காணப்படுவதால் அது உடல் நலத்திற்கு அவ்வளவு உகந்ததல்ல என்றும் கடல் ஆமை இறைச்சியை அடிக்கடி உண்ணும்போது, இருதய நோய்கள் ஏற்படலாம் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர். அத்துடன், கடலில் வாழும் நச்சுத்தன்மைகொண்ட சில உயிரினங்களை கடல் ஆமைகள் உணவாகக்கொள்வதால், அவற்றின் இறைச்சியிலும் நச்சுச் சேர்வைகள் கலந்திருக்க இடமுண்டு. எனவே, நாம் அத்தகைய கடல் ஆமை இறைச்சியை உண்பதால் எமது உடலிலும் அந்த நச்சுத்தன்மைகள் கலந்து நோய்களை அல்லது மரணத்தை ஏற்படுத்தலாம் என்றும் கூறப்படுகின்றது.


கொஸ்கொட கடல் ஆமை பாதுகாப்பு மத்திய நிலையத்தில் கடல் ஆமைக் குஞ்சுகள்


கடற்கரை மாசடைதலானது கடல் ஆமைகளுக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்


வலையில் சிக்கியுள்ள கடல் ஆமை


கடல் ஆமை ஓட்டிலிருந்து செய்யப்பட்ட ஆபரணங்கள்

## மனிதனால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்

### இறைச்சிக்காகப் பிடித்தல்

முட்டை இடுவதற்காக அவை கடற்கரையை நோக்கி வரும் சந்தர்ப்பங்களிலேயே கடல் ஆமைகள் இறைச்சிக்காக கொல்லப்படுகின்றன. இதனால், பெண் கடல் ஆமைகளே இந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. இவ்வாறு பெண் கடல் ஆமைகள் கொல்லப்படுவதால் கடல் ஆமைகள் விரைவாக அழியும் நிலை ஏற்படுகின்றது.

### முட்டைகளை அப்புறப்படுத்தல்

கடற்கரையில் முட்டை இட்ட பின்னர் தாய் கடல் ஆமைகள் வெளியேறிவிடுகின்றன. இந்நிலையில், அந்த முட்டைகளைச் சேர்த்து மனிதர்கள் உணவுக்காகப் பயன்படுத்துகின்றனர். இதனால், இவற்றின் இனம் பெருக முடியாதபடி அழிவுறுகின்றது.

### கடல் ஆமை ஓட்டுக்காக கொல்லப்படுதல்

சில கடல் ஆமைகளின் மேல் ஓடு அழகாக அலங்கார வடிவில் இருப்பதால், அந்த ஓட்டினைப் பெறுவதற்காகவும் கடல் ஆமைகள் கொல்லப்படுகின்றன.

### மீனவர்களால் பிடிக்கப்படல்

மீன்பிடிக்க வலை விரிக்கப்படும்போது, ஆமைகள் மீன் வலைகளில் சிக்குகின்றன. அவற்றை மீனவர்கள் பிடித்து உணவுக்காகவும் அதன் ஓட்டினை எடுப்பதற்காகவும் கொன்றுவிடுகின்றனர்.

### வாழ்விடம் அற்றுப் போதல்

தவறான மனித செயற்பாடுகளால் கடல் மற்றும் கடற்கரைச் சூழல் பல்வேறு வழிகளில் மாசடைவதால் கடல் ஆமைகள் தமது வாழ்விடங்களை இழக்கின்றன. அத்துடன், கடல் அரிப்பைத் தடுப்பதற்காக, கடற்கரையில் தடுப்புச்சுவர் அமைக்கப்படுவதாலும் பாறைகள் அகற்றப்படுவதாலும் முட்டை இடும் இடங்கள் அழிக்கப்படுகின்றன.



### உணவுத் தட்டுப்பாடு

கடலுக்கடியில் இருக்கும் முருகைக்கல் மற்றும் தாவரங்களுக்குள் மறைந்து வாழும் கிரிஸ்டேஸியா, நத்தை, பாசி போன்றவை கடல் ஆமைகளின் உணவாக இருக்கின்றன. எனினும், கடல் மாசுபடுத்தப்படுவதனால், முருகைக்கற்கள் அழிவடைகின்றன. இதனால், கடல் ஆமைகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு அவை உயிரிழக்க நேரிடுகின்றது.

### முறைசாரா கடற்பயணம், அபிவிருத்திப் பணிகள்

சூழலுக்குப் பொருத்தமற்ற ரீதியிலான கடற்பயணம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் காரணமாக, கடற்சூழல் மாசுபடுத்தப்படுகின்றது. இவை கடல் ஆமைகளின் வாழ்க்கைக்கு பாரிய அச்சுறுத்தலாகும். அத்துடன், இரவு நேரங்களில் கடலை நோக்கி அதிசக்தி வாய்ந்த ஒளி அலைகள் பாய்ச்சப்படும் சந்தர்ப்பங்களில் முட்டையிடுவதற்காக, கரையை நோக்கி வரும் பெண் கடல் ஆமைகளுக்கும் அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.

## கடல் ஆமைகளைப் பாதுகாப்போம்

ஆமை ஓட்டினால் செய்யப்பட்ட கைத்திறன் பொருட்களைக் கொள்வனவு செய்வதை தவிர்ப்பதோடு, அது குறித்து உங்கள் நண்பர்கள், குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நீங்கள் சந்திக்கும் உல்லாசப் பயணிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். கழிவுப் பொருட்களை நதிகளில் அல்லது கடலில் சேரவிடாது தவிருங்கள். கழிவுப்பொருட்களாலும் சூழல் மாசடைவதாலும் பெருமளவு கடல் ஆமைகள் அழிவை எதிர்நோக்கி வருகின்றன. எனவே, நீங்கள் வாழும் கடலோரப் பிரதேசத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். கரையோரத்தில் முட்டை இடுவதற்காக வரும் கடல் ஆமை ஒன்றை நீங்கள் கண்டால், அதனை நோக்கி ஒளி பாய்ச்சுவதைத் தவிருங்கள்.

கடல் ஆமையின் உருவம் பொறிக்கப்பட்ட மாலைதீவு நாணயக்குற்றி



அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.




# விதவிதமான உறக்கம்

துருவப் பிரதேசங்களில் பனிக்கரடிகள் மட்டுமல்ல, வாத்துக்களும் உள்ளன. இந்த வாத்துக்கள் பனிக்கட்டிகளில் பெரிய அளவில் ஒட்டை போட்டே உறங்குகின்றன. நியூஸிலாந்தில் உள்ள கிவி பறவைகள் தமது வாழ்விடத்தை பள்ளங்கள் மற்றும் இடுக்குகளின் இடையில் அமைக்கின்றன. இந்தப் பறவைகள் பகல் நேரத்தில் இவற்றில், நுழைந்து உறங்கும். கிரீப்பர் எனும் பறவையினம் தாம் வாழும் மரப்பொந்துகளில் மல்லாந்து படுத்து உறங்கும் பழக்கமுடையது. ஆனால், இவையெல்லாம் தனியாக உறங்கக்கூடிய வழக்கத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை, ஸ்விஃப்ட் என்ற பறவையினத்திற்கோ கூட்டமாகச் சேர்ந்தால்தான் உறக்கமே வருமாம்!




## நேரம் குறிக்க 2

Fill in the missing hands.



4:00 7:15 3:40 9:30

What time is it?




_______ _______ _______ _______

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 3



## வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப வட்டமிடுக 1







அற்லஸ் அறிவுக்கு விருந்து 366
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## குழம்பியுள்ள பழமொழிகளை ஒழுங்கமைத்து எழுதுக 5

1. அரசன்/போவதே போக்கு/சொல்வதே தீர்ப்பு/ஆறு

.............................................................

2. பாரம்/தெரியும்/சுமக்கிறவனுக்குத்/காவடிப்

.............................................................

3. நீள்புகை/நெருப்பு/எழும்புமா?/இல்லாமல்


.............................................................

4. தெரியாது/ குற்றம்/கண்ணுக்குத்/இமைக்

.............................................................

## அறிவுக்கு விருந்து - 363 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**




**போட்டி: 02**

முதலாம் வரிசையிலுள்ள முதலாவது உருவும் இரண்டாம் வரிசையிலுள்ள இரண்டாவது உருவும் ஒரே மாதிரியானவை.

**போட்டி: 04**

1. மணிக்கூடு
2. தீபாவளி
3. கறையான்
4. கற்சிலை
5. குளக்கரை

**போட்டி: 05**

1. இளமை - முதுமை
2. கனவு - நனவு
3. செலவு - வரவு
4. வளர்ச்சி - தளர்ச்சி
5. குன்று - குழி

## சொல் விளையாட்டு 4




இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 363 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
*ஜே.ஜோசியா, ரீச்சர்ஸ் ஸ்குயார், திருகோணமலை.*

**போட்டி: 02**
*ச.சதுர்சாயினி, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.*

**போட்டி: 03**
*எம்.பஸ்லூரன், குருவடம்பிடிய, பாணகமுவ.*

**போட்டி: 04**
*ஒகஸ்தீன் கிருபால், துறைநீலாவணை - 08, துறைநீலாவணை.*

**போட்டி: 05**
*எம்.அக்மல், செபஸ்தியன் வீதி, கொழும்பு-12.*

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம்.ஐ.இஸ்னா, ஒலுவில் -02.
- கே.யோனத்தன், மட்டக்களப்பு.
- எம்.அஹ்ஸான், கதுறுவன்க.
- ஆஷிக் அஹமட், யஹலதன்ன.
- நுஸ்ஹா றிஸ்வி, அம்பலந்துவ.
- வி.சிவாகரன், நீர்கொழும்பு.
- அப்துல் முஹ்சிம், பெரிய நீலாவணை.
- பா.சிவலோஜினி, கொழும்பு-12.
- எம்.அர்ஹம், மஸ்கெலியா.
- உமர் ஷுக்ரி, கட்டுகஸ்தோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலையடிவேம்பு கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித் தினப் போட்டிகள் அண்மையில் ஆர்.கே.எம்.வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, ஆலையடிவேம்பு கோட்டக் கல்வி அதிகாரி வி.குணாளன், ஆர்.கே.எம்.வித்தியாலய அதிபர் திருமதி எல். கோபாலப்பிள்ளை, அக்கரைப்பற்று வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.மன்சூர் ஆகியோர் குத்துவிளக்கேற்றுவதைப் படங்களில் காணலாம்.






கண்டி-தர்மசோக மாவத்தையைச் சேர்ந்த குமரதேவன்-சிவாஜினி தம்பதியரின் செல்வப் புதல்வி கு.விதுஷனா, 22.05.2012 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



மாபோல-நைதுவயைச் சேர்ந்த நஸீம்-பர்ஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் நாஸிக், 19.05.2012 அன்று தனது பதின்நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.




மடுல்கலையைச் சேர்ந்த அருள்ராஜ்-சுபத்ரா தம்பதியரின் செல்வப் புதல்வன் மனோஜ், 11.05.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.



கெகுணகொல்லையைச் சேர்ந்த முஹம்மட்-மின்ஹாஜ் தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸகி அஹ்மட், 29.05.2012 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# அஜந்தா ஓவியங்கள்

## ஓவியம் வரைவோம் - 103



அஜந்தா குகைகள்

இந்தியாவின் மஹாராஷ்ட்ரா மாநிலத்தின் ஔரங்காபாத் மாவட்டத்தில் அஜந்தா குகைகள் அமைந்துள்ளன. இங்கு 29 குகைகள் காணப்படுகின்றன. இன்றளவில் அவற்றின் ஆறு குகைகளில் மட்டுமே ஓவியங்கள் உள்ளிட்ட கலைப்படைப்புக்களைக் காணலாம். ஏனையவற்றில் காணப்பட்ட ஓவியங்கள் உட்பட, கலைப்படைப்புக்கள் அனைத்தும் அழிந்துவிட்டதாகக் கருதப்படுகின்றது.

இங்கு காணப்படும் ஓவியங்கள் கி.மு 2 ஆம் நூற்றாண்டு தொடக்கம் சுமார் 900 வருடங்களாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு ஓவியர்களால் வரையப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. இங்குள்ள குகைகள் பௌத்த துறவிகள் வாழ்ந்த இடங்களாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது.



அஜந்தா குகைகளில் ஓவியங்களை வரைவதற்கு சேற்றுடன் கலந்த மாட்டுச்சாணம், அரிசித் தவிடு, நொருக்கிப் பதப்படுத்தப்பட்ட வைக்கோல், மிருகங்களின் ரோமங்கள் போன்றவை கலவைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இயற்கையான பொருட்களில் இருந்தே ஓவியங்களைத் தீட்டுவதற்கான வர்ணங்கள் பெறப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஏனெனில், இங்குள்ள ஓவியங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் நிறம் மங்காமல் நீடித்து நிற்பதற்கு அதுவே காரணம் எனக் கூறப்படுகின்றது. பெரும்பாலான ஓவியங்களில் சிவப்பு நிறம் பின்னணி நிறமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு பெருமளவில் பௌத்த சமய சம்பந்தமான ஓவியங்கள், ஜாதகக் கதைகள், இயற்கைக் காட்சிகள் போன்றவையே வரையப்பட்டுள்ளன. தவிர, துறவு வாழ்க்கை சம்பந்தமான ஓவியங்களும் அலங்கார உருவங்களும் இயற்கை பொருட்களும் வரையப்பட்டுள்ளன. அஜந்தா ஓவியங்களை ஒத்த ஓவியங்கள் இலங்கையில் சீகிரியா குகைகளில் காணப்படுகின்றன.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




எஃப்.ஹனிஷ்மா,
அல்-பஹ்ரியா மத்.கல்.,
பாணந்துறை.



வை.முகுந்தன்,
கெட்டபுலா த.ம.வித்., கெட்டபுலா.



எம்.அர்கம்,
நாச்சியாதீவு மு.ம.வித்., நாச்சியாதீவு.



எஃப்.நஜ்ஹா,
பாத்திமா மு.பெ.கல்., புத்தளம்.



எஃப்.றிஸ்லியா,
பூலாச்சேனை மு.வித்., புத்தளம்.



எஸ்.ரஹ்மதுல்லா,
ஸாஹிரா தே.பாட., மாத்தளை.



எம்.திபுஷன்,
கேம்ப்றிஜ் கல்லூரி, கொட்டகலை.



எஃப்.நுஸ்ரா,
மதீனா மு.ம.வித்., மாவனல்லை.



எஸ்.நிரோஷன்,
பாலங்கோட்டை த.வித்.,
இறக்குவானை.



ஆய்ஷா பாளில்,
அறபா தேசிய பாட., வெலிகம.



எஃப்.ஹரிஷ்மா,
அல்-கமர் ம.கல்., பம்மன்னா.



தி.வினுஷா,
கிறேட் வெஸ்டன் த.வித்.,
தலவாக்கலை.



எஃப்.சிபாயா,
கனகநாயகம் மத்திய கல்.,
பலாங்கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித பாடம்



கணிதப் பரீட்சைக்கு முக்கியமான கணக்குகளைச் செய்து பார்த்துக்கொண்டிருந்தான் கோகுல். இறுதியாண்டுப் பரீட்சையில் கணிதப் பாடத்தில் 100 புள்ளிகள் வாங்கிவிட வேண்டும் என்று கடுமையாக முயற்சித்துக்கொண்டிருந்தான்.

ஆனால், ஒரு கணக்கு மட்டும் அவனுக்குப் புரியவில்லை. ஓடிச்சென்று அம்மாவிடம் கேட்டான். அவனது அம்மாவும் செய்துபார்த்து விடை வராமல் போகவே, ''அப்பாவைக் கேள்'' என்று சொல்லிவிட்டார்.

''எனக்குப் படிக்கும்போதே, [illegible]ட்டுப் போட்டாலும் கணிதம் வராது, உன் நண்பன் அரவிந்தனிடம் கேள்'' என்று அவனிடம் அனுப்பினார் அப்பா.

அரவிந்தனிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்காக கோகுல் அவனது வீட்டை நோக்கிப் புறப்பட்டான். அரவிந்தன் வீட்டில் நுழையுமுன் அவன் கண்டகாட்சி அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அங்கே தனது தாத்தா அரவிந்தனுடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான் கோகுல். இங்கே தன் தாத்தா என்ன செய்கிறார், என்று கவனித்தபோது, அவர் அரவிந்தனுக்குக் கணிதப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். சிறிது நேரம் மறைந்திருந்து கவனித்தான் கோகுல்.

''தாத்தா இந்தக் கணக்கு, பரீட்சைக்குக் கண்டிப்பாக வரும் என்று என் கணித ஆசிரியர் கூறியுள்ளார். எனக்குத் தெரியாததை எல்லாம் உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதால்தான் என்னால் வகுப்பில் முதல் மாணவனாக வர முடிகிறது'' என்று அரவிந்தன், கோகுலின் தாத்தாவிடம் கூறினான்.

''அப்படியா, நல்லபிள்ளை தொடர்ந்து நன்றாகப் படிக்க வேண்டும்'' என்றார் தாத்தா.

''எனக்கு சொல்லித் தரும் உங்களுக்குத் தான் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை'' என்று வருத்தப்பட்டான் அரவிந்தன்.

''எனக்கு நீயும் ஒரு பேரன் மாதிரித்தான். உன் அம்மா வீட்டுவேலை செய்து உன்னைப் படிக்க வைக்கிறார். உன்னால் பணம் கொடுத்து டியூஷன் போகமுடியாது. நான் அந்தக் காலத்து கணிதப் பட்டதாரி. என் பேரனுக்கு சொல்லிக் கொடுத்தால் பணம் வாங்குவேனா? அதே மாதிரித்தான் உனக்கும். நீ நன்றாகப் படித்தால் அதுவே போதும்'' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டார்.

எல்லாவற்றையும் மறைந்திருந்து கேட்ட, கோகுல் வெட்கப்பட்டான்.

'அம்மாவும் அப்பாவும் என் தாத்தாவை ஒன்றுக்கும் உதவாதவர் என்று ஒதுக்கி வைத்திருந்தார்கள். அதனால் நானும் அவரைக் கண்டுகொள்ளாமல் ஒதுங்கியே இருந்துவிட்டேன். தாத்தாவுக்கோ, அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரியாத கணக்குக்கூட, தெரிந்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்ட அரவிந்தன் முதல் மதிப்பெண் வாங்கியிருக்கிறான். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்த கதையாக, நானோ என் தாத்தாவைப் பயன்படுத்திக்கொள்ளாமல், கணக்குப் புரியாமல் தவித்திருக்கிறேன். இனிமேல் நானும் தாத்தாவை மதிப்பேன். அவரிடம் கணித பாடம் கற்றுக்கொண்டு நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்குவேன்'' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

வீட்டுக்குள் ஒரு மூலையில் ஒதுங்கி இருந்த தாத்தாவின் அறைக்குள் ஓடினான்.

''தாத்தா எனக்கு இந்தக் கணக்கைச் சொல்லித் தாருங்கள்.''

''என்ன கணக்கு கோகுல், வா சொல்லித் தருகிறேன்'' என்று தாத்தாவும் சந்தோஷமாக கணக்கைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். அன்று முதல் கோகுலுக்கு அவனது தாத்தாவின் அறையே டியூஷனாக மாறிவிட்டது.

# போட்டி மனப்பான்மை



கதிர்வேல், சுந்தர் இருவரும் ஒரே பாடசாலையில் எட்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள். எப்பொழுதும் இருவருக்குள்ளும் போட்டி மனப்பான்மை இருந்துகொண்டே வந்தது. தேர்வு வந்ததால், பரீட்சையில் யார் அதிக மதிப்பெண் எடுப்பது? என்று போட்டி வைத்துக்கொண்டனர்.

அந்தப் பந்தயத்தில் ஜெயிப்பதற்காக, கூடுதல் கவனத்துடன் படித்தான். ஆனால், கதிர்வேலுவோ குறுக்கு வழியில் ஜெயிக்க நினைத்தான்.

அன்று பரீட்சை ஆரம்பமானது. சுந்தர் முழுமையாக தன்னைத் தயார்படுத்திக்கொண்டு வந்திருந்தான், பரீட்சை அறையில் மாணவர்கள் வரிசையாக அமர்ந்து பரீட்சை எழுதிக்கொண்டிருந்தனர்.

தலைமையாசிரியர் ஒவ்வொரு வகுப்பாகப் பார்வையிட்டுக்கொண்டே வந்தார். கதிர்வேலுவின் வகுப்புக்குள் தலைமை ஆசிரியர் நுழைந்தார். பதட்டமாக எழுதிக்கொண்டிருந்த கதிர்வேலுவை எழுப்பி சோதனை செய்தார். அவனிடம் நிறைய விடை எழுதிய பேப்பர்கள் இருந்தன. பயந்துபோன கதிர்வேல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

''உனக்குப் பரீட்சை எழுத அனுமதியில்லை. நீ வெளியே போகலாம்'' என்று சொல்லிவிட்டு அடுத்த வகுப்பை நோக்கி நடந்த தலைமை ஆசிரியரின் பின்னால் எழுந்து ஓடினான் சுந்தர்.

''சேர்''

''சொல்லு சுந்தர் எதுக்கு பரீட்சை எழுதுவதை விட்டுவிட்டு ஓடி வருகிறாய்?'' தலைமை ஆசிரியர் கேட்டார்.

சுந்தர் தனக்கும் கதிர்வேலுவுக்கும் ஏற்பட்ட போட்டியைப் பற்றித் தலைமை ஆசிரியரிடம் கூறினான். ''அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும் என்கிற ஆசையால் இப்படிச் செய்துவிட்டான். அவனை மன்னித்து பரீட்சை எழுத அனுமதியுங்கள் சேர்'' என்று கெஞ்சினான்.

கதிர்வேலுவை அழைத்த தலைமை ஆசிரியர், ''கதிர்வேல் லட்சியத்தை அடைய என்றைக்கும் குறுக்கு வழியில் போகக்கூடாது. போனால், உன்னை மாதிரித்தான் அவமானப்பட நேரிடும். இனிமேலாவது, நேர்மையாகப் படித்து மதிப்பெண் வாங்குகின்ற வழியைப் பார்'' என்று எச்சரித்தார்.

''சரி '' என்று தலையாட்டிவிட்டு வெளியே வந்தான் கதிர்வேல்.

சுந்தருக்கு நன்றி சொன்ன கதிர்வேல், நேர்மையான முறையில் பரீட்சையை எழுத ஆரம்பித்தான்.

# முயல்களின் பயம்



காட்டில் உள்ள அனைத்து முயல்களும் ஒன்று கூடின. தங்களுடைய பரிதாப நிலை பற்றித் தலைவன் முயல் பேசியது.

'என்ன வாழ்வு இது? கொஞ்சம்கூட நிம்மதி இல்லை. அமைதியாகச் சாப்பிட முடியவில்லை; தூங்க முடியவில்லை. நிழலைக் கண்டாலும் பயப்பட வேண்டியிருக்கிறது. இலைகள் அசையும் சத்தத்தைக் கேட்டாலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட வேண்டியதாக இருக்கிறது. இப்படிப் பயந்து பயந்து, வாழ்வதற்குப் பதில், இறந்துவிடுவதே மேல்'' என்றது.

தலைவரின் இந்த உருக்கமான பேச்சைக் கேட்ட முயல்கள் அனைத்தும் யோசித்தன. அவற்றுக்கும் தலைவரின் அந்த முடிவுதான் சரியெனப் பட்டது. உடனே அனைத்து முயல்களும் சாவதற்காகக் குளத்தை நோக்கி நடந்து சென்றன.

குளத்தின் கரையில் அமர்ந்திருந்த தவளைகள், முயல்களின் காலடிச் சத்தம் கேட்டதும் குளத்துக்குள் 'தொப்' தொப்பெனக் குதித்தன. நீரில் இருந்து எழுந்த சத்தத்தைக் கேட்டதும், முயல்கள் பயந்து போய் நின்றன. இதுதான் சமயம் என நினைத்த கிழட்டு முயல் ஒன்று பேசத் தொடங்கியது.

''நண்பர்களே, நாம் பயம் காரணமாக, இறந்து விடலாம் என நினைத்து இந்தக் குளத்திற்கு வந்தோம். ஆனால், நம்மைவிடப் பயந்த உயிரினங்களும் உள்ளன என்பது நமக்குத் தெரிந்துவிட்டது. அப்படியானால், நாம் எதற்குச் சாகவேண்டும்? நம்முடைய திறமையைக்கொண்டு சிறப்பாக வாழ முயற்சி செய்வோம்'' என்றது. அனைத்து முயல்களும் அதனை ஏற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அக்கா, தங்கை ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**අක්කා: නංගි, අලුත් අවුරුද්දට තව සතියයි තියෙන්නේ.**
நங்கி, அலுத் அவுருத்தட தவ சதியய் தியென்னே.
அக்கா: **தங்கச்சி, புது வருடத்திற்கு இன்னும் ஒரு கிழமைதான் இருக்கின்றது.**

**නංගි: ඔව් අක්කේ, අපි මොනවද කරන්න ඕනේ?**
ஒவ் அக்கே, அப்பி மொனவத கரன்ன ஓனே?
தங்கை: **ஆம் அக்கா, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?**

**අක්කා: අද අපි ගේ ශුද්ධ පවිත්‍ර කරමු. ඔයා මේ සාලේ තියෙන බඩුවල දූවිලි පිහදාන්න.**
அத அப்பி கே சுத்த பவித்ர கரமு. ஒயா மே சாலே தியென படுவல தூவிலி பிஹதான்ன.
அக்கா: **இன்று நாங்கள் வீட்டைச் சுத்தம் செய்வோம். நீங்கள் இந்த வரவேற்பறையில் உள்ள தளபாடங்களில் தூசி துடையுங்கள்.**

**නංගි: හා අක්කේ. මම මේ පුටු ටික එළියට දාන්නද?**
ஹா அக்கே. மம மே புட்டு டிக எளியட்ட தான்னத?
தங்கை: **சரி அக்கா. நான் இந்தக் கதிரைகளை வெளியே போடவா?**

**අක්කා: ආ.. එහෙනම් එන්න අල්ලන්න.**
ஆ.... எஹெனம் என்ன அல்லன்ன.
அக்கா: **ஆ.... அப்படியென்றால் வாருங்கள் பிடிப்போம்.**

**නංගි: අක්කේ! බිම පිහදාන්නේ නැද්ද?**
அக்கே! பிம பிஹதான்னே நெத்த?
தங்கச்சி: **அக்கா! நிலத்தைத் துடைப்பதில்லையா?**

**අක්කා: අපි මේ වැඩ ඉවර කරලා රෑට ඒක කරමු.**
அப்பி மே வெட இவர கரலா ரேட்ட ஏக கரமு.
அக்கா: **நாங்கள் இந்த வேலைகளை முடித்துவிட்டு இரவில் அதைச் செய்வோம்.**

**නංගි: අක්කේ! කැවිලි හදන්නත් ඕනේ නේද?**
அக்கே! கெவிலி ஹதன்னத் ஓனே நேத?
தங்கச்சி: **அக்கா! பலகாரமும் செய்ய வேண்டும்தானே?**

**අක්කා: ඔව්. අම්මා එක්ක එකතුවෙලා ඒවා හදමු.**
ஒவ். அம்மா எக்க எகதுவெலா ஏவா ஹதமு.
அக்கா: **ஆம். அம்மாவோடு சேர்ந்து அவற்றைச் செய்வோம்.**

**නංගි: හොඳයි අක්කේ.**
ஹொந்தய் அக்கே.
தங்கை: **நல்லது அக்கா.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. நாங்கள் வீட்டைச் சுத்தம் செய்வோம்.
..............................................................

ii. இந்தக் கதிரைகளை வெளியில் போடவா?
..............................................................

iii. அம்மாவுடன் சேர்ந்து செய்வோம்.
..............................................................






**பிறர் கூற்று வாக்கியங்களில் (Indirect Speech) காணப்படுகின்ற உடன்பாடு வாக்கியங்களையும் (Affirmative Sentence) மற்றும் எதிர்மறை வாக்கியங்களையும் (Negative Sentence) ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.**

(அ) பல்வைத்தியர் கமலாவை (அவளது) வாயைத் திறக்குமாறு கூறினார்.
The dentist told Kamala to open her mouth.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) பல்வைத்தியர் கமலாவை (அவளது) வாயைத் திறக்க வேண்டாமெனக் கூறினார்.
The dentist told Kamala not to open her mouth.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்புகள்:**
- to open-( Affirmative)
  திறக்குமாறு - (உடன்பாடு)
- not to open- (Negative)
  திறக்க வேண்டாமென (எதிர்மறை)

(இ) ஆசிரியர் மாணவர்களை வெளியே போகுமாறு கூறினார்.
The teacher told the students to go out.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) ஆசிரியர் மாணவர்களை வெளியே போக வேண்டாமெனக் கூறினார்.
The teacher told the students not to go out.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்புகள்:**
- to go out -(Affirmative)
  வெளியே போகுமாறு - (உடன்பாடு)
- not to go out - (Negative)
  வெளியே போக வேண்டாமென (எதிர்மறை)

(உ) அந்தப் பணத்தைச் செலுத்துமாறு முகாமையாளர் காசாளரிடம் கூறினார்.
The manager told the cashier to pay that money.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) அந்தப் பணத்தைச் செலுத்த வேண்டாமென முகாமையாளர் காசாளரிடம் கூறினார்.
The manager told the cashier not to pay that money.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்புகள்:**
- to pay - (Affirmative)
  செலுத்துமாறு - (உடன்பாடு)
- not to pay -(Negative)
  செலுத்த வேண்டாமென - (எதிர்மறை)

(எ) அந்தக் கடிதத்தைத் தபாலிடுமாறு ஆசிரியர் ஹுசைனிடம் கூறினார்.
The teacher told Hussain to post that letter.
(உடன்பாடு வாக்கியம் -Negative Sentence)

(ஏ) அந்தக் கடிதத்தை தபாலிட வேண்டாமென ஆசிரியர் ஹுசைனிடம் கூறினார்.
The teacher told Hussain not to post that letter.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்புகள்:**
- to post -(Affirmative)
  தபாலிடுமாறு - (உடன்பாடு)
- not to post - (Negative)
  தபாலிட வேண்டாமென-(எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் - ஸ்பெயின் நகரங்களில் ஆர்ப்பாட்டம்

பொருளாதாரக் கட்டுப்பாடுகள், மற்றும் செலவு குறைப்பு நடவடிக்கை ஆகிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் நாடுகளின் அரசாங்கங்களுக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக வீதிகளில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு ஸ்பெயினின் மெட்ரிட் நகரில் ஒன்றுகூடிய




ஆர்ப்பாட்டக் குழுவினர் பல்வேறு சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

நாட்டில் இளைஞர், யுவதிகளில் அரைப் பங்கிற்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பின்றி இருப்பதாகவும் குறிப்பாக, 24 சதவீதத்திற்கும் அதிகமானோர் இதனால் பாரிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். மெட்ரிட் நகரில் மாத்திரமன்றி ஸ்பெயினின் மேலும் 80 நகரங்களிலும் இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

கடந்தவாரம் ஊழியர் நிவாரணத்திலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையினால் அதற்கு எதிராக லண்டன் பொலிஸார் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நிக்கலஸ் சார்கோஸி அரசியலிலிருந்து ஓய்வு

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற நிக்கலஸ் சார்கோஸி அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். பெரிஸ் நகரில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றிலேயே இதனை அவர் அறிவித்துள்ளார்.



2007 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு முன்னர் சார்கோஸி அவர் அங்கம் வகிக்கும் 'யூ என் டீ' கட்சி உறுப்பினராக இருந்த சமயங்களில் ஜனாதிபதி ஜெக் ஷராக்கின் அமைச்சரவையில் உள்விவகார அமைச்சராகவும், பொருளாதார அமைச்சராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

2007 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த நாள் தொடக்கம் இன்றுவரையில் சார்கோஸி பல சந்தர்ப்பங்களில் மக்களின் அதிருப்திக்கு ஆளாகியிருந்தார். ஆபிரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடனான சார்புநிலைக் கொள்கை, பொருளாதார ஸ்திரனமின்மை ஆகிய காரணங்களினாலேயே, பிரான்ஸ் மக்கள் சார்கோஸி மீது அதிருப்தியுடன் இருந்ததாகவும் ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன.

## தெரிந்து கொள்வோம்



* முதன்முதலாக நீராவி என்ஜினை உருவாக்கியவர் யார்?
  டிரவிதிக்
* இணைய இணைப்பு வசதியை (www) வடிவமைத்தவர் யார்?
  டிம் பர்னஸ் லீ



* துலிப் மலர்கள் தோட்டத்திற்கு புகழ்பெற்ற நாடு எது?
  பிரான்ஸ்



* ஸ்கையி தீவு எந்த நாட்டில் உள்ளது?
  ஹொலன்ட்



* 'மில்லியனம் டும்' எனப்படும் உலகின் மிகப்பெரிய அரங்கம் உள்ள நாடு எது?
  கிரீன்விச்
* பாண்டவ சகோதரர்களில் உடற்பலம் பொருந்தியவர் யார்?
  பீமன்



* நிலவில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதன் யார்?
  நீல் ஆம்ஸ்ட்ரோங்



* புகழ்பெற்ற ஓவியமான மோனலிசாவை வரைந்தவர் யார்?
  லியனார்டோ டாவின்சி



* 'இக்ளு' எனப்படும் வீடுகள் எதன்மூலம் கட்டப்படுகின்றன?
  பனிக்கட்டி



* இந்து மத அமைப்பின்படி, செல்வத்துக்கு அதிபதியான கடவுள் யார்?
  லட்சுமி



* விவேகானந்தர் நினைவுப்பாறை எங்குள்ளது?
  கன்னியாக்குமாரியில் உள்ளது

(எஸ்)

### திருத்தம்

'தெரிந்துகொள்வோம்' பகுதியில் 'முன்னர் பாலஸ்தீன் என அழைக்கப்பட்ட நாடு இன்று இஸ்ரேல் ஆகும்' என உடுவை பரந்தாமன் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் இக்கூற்று தவறாகும். ஏனெனில், பாலஸ்தீன் எனும் நாடு இன்றும் உள்ளது. விளக்கமாக கூறுவதென்றால் பாலஸ்தீன் என்ற நாட்டில் யூதமக்களை குடியேற்றி இஸ்ரேல் என்னும் புதிய நாட்டை உருவாக்கினர். எனவே, ஆரம்ப பலஸ்தீனின் ஒரு பகுதியிலேயே, இஸ்ரேல் இன்றும் உள்ளது.

எம்.எம்.எஃப்.ஸீனியா, கடுகண்ணாவை.

* தவறை சுட்டிக்காட்டியமைக்கு நன்றி

(ஆசிரியர்)




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## வெளிநாடுகளுக்கு செல்கிறார் சூக்கி



மியன்மார் எதிர்கட்சித் தலைவியான ஆன்சாய் சூக்கி 24 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக கடவுச் சீட்டொன்றைப் (பாஸ்போர்ட்) பெற்றுள்ளார். கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சூக்கி அரசியல் நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபட முடியாத நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

எனினும், அண்மையில் மியன்மாரில் நடைபெற்ற தேர்தலில் தேசிய லீக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டார். மேற்குலக நாடுகள் மியன்மார் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை அடுத்தே ஆட்சியாளர்கள் சூக்கியை விடுதலை செய்ததுடன், தேர்தலையும் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலையிலேயே, சூக்கி தனது அரசியல் நடவடிக்கைகளில் அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்வதற்காக, வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்வதற்கு வசதியாக கடவுச்சீட்டைப் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, 1991 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நொபெல் பரிசினை பெறுவதற்காக, சூக்கி நோர்வேக்கு செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் ஜனாதிபதி பயணித்த விமானத்தில் மின்னல் தாக்கியது

பிரான்ஸின் புதிய ஜனாதிபதி ஒலன்ட் பயணம்செய்த விமானம் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகியது. ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் தமது முதலாவது



உத்தியோகபூர்வ விஜயமாக, ஜேர்மனி நோக்கிச் சென்றபோதே, மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பல தடவைகள் விமானத்தை மின்னல் தாக்கியபோதிலும் அனர்த்தங்கள் ஏதுமின்றி ஜனாதிபதி ஒலன்ட்டை விமான ஓட்டிகள் பத்திரமாக ஜேர்மனிக்கு கொண்டு சென்று சேர்த்தனர்.

ஐரோப்பிய பொருளாதார நெருக்கடி தொடர்பாக, ஜேர்மன் தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்காகவே, ஹொலன்ட் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவில் பாரிய பொருளாதார வல்லமையைக் கொண்ட முதலாவது நாடாக ஜேர்மனி இருப்பதுடன் அதற்கு அடுத்தபடியாக இருப்பது பிரான்ஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அற்லஸ் கேள்வி - 361

**கேள்வி:** ஆன்சான் சூக்கிக்கு எத்தனையாம் ஆண்டில் நொபெல் பரிசு வழங்கப்பட்டது?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 361,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 359 இன் சரியான விடை: 2016 ஆம் ஆண்டு

பரிசு பெறுவோர்

லதுசனா சந்திரமோகன்,
கடற்கரை வீதி, நீர்கொழும்பு.

ஆர்.துளசிகரன்,
மிரிஸ்வத்தை, வெலிப்பன்னை.

ஜே.சங்கீர்த்தனன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹுசேன் போல்ட்டை நிச்சயம் தோற்கடிப்பேன்

## - டேவிட்




கென்யாவின் 800 மீற்றர் ஓட்டவீரரும் ஒலிம்பிக் மற்றும் உலக செம்பியன் போட்டிகளிலும் தங்கப் பதக்கங்களை வெற்றி கொண்டுள்ள டேவிட் ருபேஷியா தன்னால் ஹுசேன் போல்ட்டையும் தோற்கடிக்க முடியும் எனவும் தன்னுடன் போட்டியிட ஹுசேன் போல்ட் முன்வரவேண்டும் என்றும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

"ஹுசேன் போல்ட் என்னுடன் போட்டியிட முன்வருவாராகில் அவரை நிச்சயமாக நான் தோற்கடிப்பேன். 400 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் கூட போல்ட்டை தோற்கடிக்க முடியும்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெறவுள்ள லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் ஜெமேய்க்காவின் சார்பாக 100 மீற்றர் 200 மீற்றர் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள டேவிட்டுக்கு அந்தப் போட்டிகளில் சரியான எதிர்ப் போட்டியாளர் எவரும் கிடையாது. ஆனால், 400 மீற்றர் போட்டியில் டேவிட்டும், ஹுசேன் போல்ட்டும் மோதவுள்ளனர். இந்தப் போட்டியிலேயே, ஹுசேன் போல்ட்டை நிச்சயம் தான் தோற்கடிக்கவிருப்பதாக உறுதியாகக் கூறுகின்றார் டேவிட் ருபேஷியா.

# பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா போட்டிகள் இலங்கையில் இல்லை

இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறுவதாக இருந்த பாகிஸ்தான் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடர் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நாட்களில் இலங்கையில் ஐ பி எல் போட்டிகளைப் போன்று எஸ் எல் பி எல் (ஸ்ரீலங்கா பிரிமியர் லீக்) போட்டித்தொடர் நடைபெறவுள்ளமையின் காரணமாகவே, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தம்மால் செய்ய முடியாமல் இருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் போட்டிகளில் கலந்துகொண்டிராத நிலையிலேயே, இலங்கையில் இரண்டு அணிகளும் சந்திப்பதற்கான வழிகள் ஏற்பட்டிருந்தது. எனினும், இந்த முயற்சியும் தற்போது பிழைத்துப்போனமையினால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வேறெந்த நாட்டில் இப்போட்டிகளை நடத்தலாம் என்று ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

# ஆசிய கரையோர போட்டிகளுக்கு இலங்கை வீரர்கள் தயார்



சீனாவின் ஹையேன்ட் நகரில் நடைபெறவுள்ள கடற்கரையோர விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கென இலங்கை சார்பாக போட்டியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட 41 பேரை சீனாவிற்கு அனுப்புவதற்கு தேசிய ஒலிம்பிக் சங்கம் தீர்மானித்துள்ளது.







44 நாடுகள் கலந்துகொள்கின்ற இந்த கடற்கரையோரப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதுடன், இதில் 12 வகையிலான போட்டிகள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் இலங்கை அணியினர் வொலிபோல் (ஆடவர், மகளிர்), கைப்பந்தாட்டம் (ஆடவர் மகளிர்), கபடி (ஆடவர் மகளிர்), படகுப் போட்டி (ஆடவர்) ஆகிய நான்கு வகையிலான போட்டிகளில் மட்டுமே கலந்துகொள்ளவுள்ளனர்.



ஜூலை மாதம் லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கடற்கரையோர இலங்கை வொலிபோல் அணியை தெரிவுசெய்வதற்கான ஒரு முன்னோடிப் போட்டியாக மேற்படி ஆசிய கடற்கரையோர 'வொலிபோல்' போட்டியைப் பயன்படுத்த முடியும் என்றும் தேசிய ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி சுடுதல் போட்டி:





## வரலாறு

துப்பாக்கி சுடும் பந்தயங்கள் 1896 ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் போட்டியிலேயே முதன்முதலாக இடம்பெற்றது. அதன்பின்னர் 1928 ஆம் ஆண்டு அந்தப் போட்டிகள் நீக்கப்பட்டன. 4 ஆண்டுகள் கழித்து மீண்டும் ஒலிம்பிக் போட்டியில் இப்போட்டி சேர்த்துக்கொள்ளப்பட்டது. அப்போது கைத்துப்பாக்கி மற்றும் துப்பாக்கி சுடுதல் என்று இரண்டு பிரிவாகப் போட்டிகள் நடத்தப்பட்டன. 1968 ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இருந்து பெண்களும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர்.

## சாதனையாளர்

* 10 மீற்றர் தூர ரைபிளால் சுடும் பந்தயத்தில் ககன் நரங் என்பவர் உலக சாதனை படைத்துள்ளார். இவர் 2010 'கொமன்வெல்த் போட்டிகளில் 4 தங்கம் வென்றுள்ளார். லண்டன் ஒலிம்பிக் பந்தயத்திற்குத் தேர்வுபெற்ற முதலாவது இந்திய வீரர் இவர்தான்.
* ஜஸ்பால் சிங் ராணா, அபினவ் பிந்ரே மற்றும் அஞ்சலி பகவத் போன்ற முன்னணி துப்பாக்கி சுடும் வீரர் வீராங்கனைகள் இந்தியாவுக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர். இவர்கள் ஆசிய மற்றும் கொமன்வெல்த் போட்டிகளில் சாதனை படைத்துள்ளனர்.

## விதிமுறைகள்

* துப்பாக்கி சுடும் பந்தயத்தில் 15 பிரிவுகள் உள்ளன. இதில் பெண்களுக்கு 7 பிரிவுகளில் பந்தயம் நடக்கிறது. ஷொட் கன், ரைபிள் மற்றும் பிஸ்டல் ஆகிய 3 வகையான துப்பாக்கிகளை பயன்படுத்திப் போட்டி நடைபெறும். இது தவிர நகரும் இலக்கு, நகராத இலக்கு என்ற அடிப்படையிலும் குறிபார்த்து சுட வேண்டும்.
* ஷொட் கன் பிரிவில் கலந்துகொள்பவர்கள் சிறிய களிமண் தகடுகளை குறிபார்த்துச் சுட வேண்டும். குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு திசைகளில் இருந்து இவை பறந்து வரும். இந்த களிமண் தகடுகளை 'பறவை' என்று அழைப்பார்கள். இதை 'டிரொப் ஷுட்டிங்' என்று அழைப்பார்கள். டபிள் டிரொப் பிரிவில் ஒரே நேரத்தில் வேறு வேறு உயரம், கோணத்தில் இருந்து வெளிப்படும் களிமண் தகடுகளை சுட்டு வீழ்த்த வேண்டும்.
* ஸ்கீட் பிரிவுப் பந்தயத்திலும் இதுபோலவே 2 இலக்குகள் 40 மீற்றர் இடைவெளியில் வேறு வேறு கோணத்தில் பறந்து வரும். இதைக் குறிபார்த்து சுட வேண்டும்.
* ரைபிள் மற்றும் பிஸ்டல் பிரிவுப் பந்தயங்களில் 10,25,50 மீற்றர்கள் தொலைவில் உள்ள இலக்கைக் குறிபார்த்துச் சுட வேண்டும். இலக்கின் நடுவில் சுட்டால் 10 புள்ளிகள் அளிக்கப்படும். இலக்கை விட்டு விலகும் தூரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறையும்.

## உங்களுக்குத் தெரியுமா?

அங்கேரி நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரரான கரோலி டாகாக்ஸ் என்பவர் 1938 ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பில் வலது கையை இழந்துவிட்டார். இருப்பினும் இவர் மனம் தளராமல் இடது கையால் துப்பாக்கி சுடக் கற்றுக்கொண்டார். 1948 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயத்தில் இவர் பிஸ்டல் பிரிவில் 2 தங்கப்பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரீட்சை இன்றி வெற்றி!

குரு ஒருவரிடம் மூன்று சீடர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். ஒருநாள் அவர்கள் மூவரையும் அழைத்த குரு, ''உங்கள் படிப்பு முடிந்துவிட்டது. நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்'' என்றார்.

'பரீட்சை எதுவும் வைக்கவில்லையே. எமது கல்வி கற்கும் க[illegible] முடிந்துவிட்டது என்று குரு சொல்கிறாரே' என்று மூவரும் வியப்படைந்தனர். பின்னர் குருவை வணங்கிவிட்டு, மூவரும் அங்கிருந்து புறப்பட்டனர். அவர்கள் செல்லும் வழியில் ஓரிடத்தில் முட்கள் சிதறிக் கிடந்தன. இதனைக்கண்ட மூவரும் நின்றனர். முதலாமவன் முள் இல்லாத இடமாகப் பார்த்துக் கவனமாக அடிமேல் அடி வைத்து அந்த இடத்தைக் கடந்தான். இரண்டாமவன் ஒரே ஓட்டமாக ஓடிவந்து அந்த முட்களைத் தாண்டினான். மூன்றாமவனோ, வழியில் கிடந்த முட்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தலானான். அவன் கையில் முட்கள் குத்தி இரத்தம் கசிந்தது. இதைப்பார்த்த இருவரும் ''ஏன் இப்படித் துன்பப்படுகிறாய்? எங்களைப் போன்று தாண்டி வந்திருக்கலாமே!'' என்றனர். ஆனால், அவனோ தொடர்ந்து பாதையில் கிடந்த முட்களையெல்லாம் அப்புறப்படுத்தினான். பாதையில் ஒரு முள்கூட இல்லாதவாறு துப்பரவுபடுத்தினான்.

அப்பொழுது குரு அங்கு வந்தார். மூன்று சீடர்களும் அவரை வணங்கினார்கள். ''உங்களைச் சோதிப்பதற்காகவே முட்களை இங்கே பரப்பி வைத்தேன். சோதனையில் உங்களில் இருவர் வெற்றிபெறவில்லை. நீங்கள் மீண்டும் படித்தாக வேண்டும். மற்றவர்கள் படும் துன்பங்களை நாம் எம்மால் இயன்ற அளவு நீக்க முயற்சி செய்ய வேண்டும். இதுதான் கல்வியின் நோக்கம். என் சோதனையில் வெற்றி பெற்றவர் ஒருவர்தான்'' என்றார் குரு. தோல்வியடைந்த இருவரும் தங்களது தவறை உணர்ந்தனர். வெற்றி பெற்ற சீடனை வாழ்த்தி அனுப்பி வைத்தனர்.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தேசிய பாட.,
ஓட்டமாவடி.




## பொது அறிவுத் தகவல்கள்

★ உலகின் மிகப் பெரிய நதி - மிசிசிப்பி
★ நீந்தத் தெரியாத மிருகம் - ஒட்டகம்
★ இறக்கை இல்லாத பறவை - கிவி
★ உலகின் அதி உயரமான கோபுரம் - ஈஃபிள் கோபுரம்
★ வேகமாகப் பறக்கும் பறவை - புறா
★ உலகில் சிறிய தேசிய கீதத்தை உடைய நாடு - ஜப்பான்
★ பெரிய காற்பந்து மைதானம் உள்ள நாடு - பிரேசில்
★ இலங்கைக் காடுகளில் இல்லாத விலங்கு - சிங்கம்
★ உலகின் மிக நீளமான மலைத்தொடர் - அந்தீஸ்
★ உலகின் மிகப் பெரிய பாலைவனம் - சஹாரா

எஸ்.சபீஸ் அஹமட்,
அக்/அஸ்-ஸிறாஜ் ம.வித்., அக்கரைப்பற்று - 01.

# பைசா கோபுரம் சாய்ந்திருப்பதேன்?

பைசா கோபுரம் இத்தாலிய நாட்டில் உள்ள பைசா (Pisa) நகரில் அமைந்துள்ளது. இக்கோபுரம் பளிங்குக் கற்களால் ஆனது. இதன் அடித்தளச் சுவர்கள் சுமார் 4 மீற்றர் பருமனானவை. 8 மாடி கொண்ட இக்கோபுரத்தின் உயரம் 55 மீற்றர்களாகும்.

பைசா கோபுரம் சாய்ந்திருப்பதற்கான காரணம், இதன் அடிக்கல் மணற்பாங்கான நிலத்தில் இடப்பட்டமையாகும். இதன் ஒரு பகுதி மணற்பாங்கான நிலத்தில் அழுந்தியதால், இதில் சாய்வு ஏற்பட்டது. இந்தக் கோபுரம் கிட்டத்தட்ட 5 மீற்றர் சாய்ந்து நிற்கிறது. 1174 இல் இதைக் கட்டத் தொடங்கியபோது, இக்கோபுரம் சாயப் போகிறது என எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், மூன்றாவது தளத்தைக் கட்டும்போதே அது சரிய ஆரம்பித்தது. அப்போது இதன் கட்டுமானத்தில் சிறிது மாறுதல்களைச் செய்து 1350 இல் இக்கோபுரப் பணியைப் பூர்த்திசெய்தனர்.



எம்.எஸ்.ஸம்ரியா,
மாறை/அல்மினா மு.ம.வித்.,
மீயல்லை. ஹக்மனை.


# வில்லியம் ஷேக்ஸ்பியர் (1564- 1616)



வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி ஸ்ட்ராட்போர்ட் ஹேவன் நகரில் பிறந்தார். இவரது தந்தையார் ஓர் உழவராகவும் கையணிகள் விற்பவராகவும் இருந்தார். ஆற்றல் மிக்க மகாகவியின் தந்தையாருக்கு எழுதப், படிக்கத் [illegible]யாது. ஷேக்ஸ்பியர் த[illegible]து பதின்மூன்றாவது வயதில் பாடசாலையை விட்டு விலகினார். இதற்கு, அவரது தந்தையின் வியாபார வீழ்ச்சியே காரணமாக இருந்துள்ளது. இதனால், அவர் வேலைதேடி அலைந்தார். பல சிரமங்களின் பின் லண்டன் நகரில் நாடகம் பார்க்க வருபவர்களின் குதிரைகளைப் பாதுகாக்கும் வேலை அவருக்குக் கிடைத்தது. இதன்பின்னர் நாடகங்களில் ஈடுபாடு கொண்டு அதில் நடிக்கவும் செய்தார். பிற்காலத்தில் நாடக எழுத்தாளராக, மகாகவியாக இவ்வுலகில் திகழ்ந்தார். 'ஆங்கில இலக்கியத்தின் ஆன்மா' போன்று விளங்கும் அளவிற்கு ஆங்கிலேயர்களிடையே அவர் புகழ் பரவியது. உலகம் ஈன்றெடுத்த அரிய தவப்புதல்வர் வில்லியம் ஷேக்ஸ்பியர். 'நாவலர் நாயகம்' என்று போற்றப்பட்ட ஷேக்ஸ்பியர் 1616 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி மரணமடைந்தார்.

எம்.எம்.முஸ்தாக் அஹ்மட்,
க/அஸ்ஹர் கல்., அக்குறனை.

## நேரம்




*இழந்த செல்வத்தை
ஈடுகட்டிவிடும் உழைப்பு!*

*இழந்த அறிவை
மீட்டுத் தந்துவிடும் படிப்பு!*

*இழந்த உடல் நலத்தைச்
சீர்செய்துவிடும் மருந்து!*

*ஆனால், ஒருமுறை
இழந்த நேரம்
இழக்கப்பட்டதுதான்
எப்போதைக்குமாய்!*

தெ.திஜுஷிகா,
சாவகச்சேரி இந்.கல்., சாவகச்சேரி.

## இலங்கை பற்றிய சில தகவல்கள்

* இலங்கையில் சுண்ணாம்பு கிடைக்கும் இடம் - யாழ்ப்பாணம்
* மகாவலி திசைதிருப்புத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட விலங்கு - யானை
* இலங்கையில் பாதுகாக்கப்பட்ட வனம் - சிங்கராஜ வனம்
* இலங்கையின் வான் படையைக் குறிக்கும் சின்னம் - கழுகு
* கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் - வாழைச்சேனை
* உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - நுவரெலியா.

ஏ.என்.எஃப். நஸாஹத், பு/பாத்திமா மு.பெ.கல்., புத்தளம்.

# கண் இமை பற்றி அறிந்தும் அறியாததும்





இமைகள் மெல்லிய தோலால் ஆனவை. அவை நமது பார்வையைத் தடுக்காதபடி வேகமாக அசைகின்றன. அனேகமாக, ஆறு விநாடிகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு மனிதரும் கண் இமைகளை இமைக்கின்றனர். அந்த வகையில், ஒரு மனிதன் தனது வாழ்நாளில் கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி முறைகள் இமைக்கின்றான். இமை யில் உள்ள முடிகள் விரிவானவை. தூசுகள் கண்ணில் விழாமல் பாதுகாப்பதே இவற்றின் பணியாகும். அத்துடன், இமைகள் மழை பெய்யும்போது அல்லது, காற்று சற்று வேகமாக வீசும்போது, தாமாகவே மூடிக் கொள்கின்றன. மேலும் மழைநீர், வியர்வை கண்களில் விழாமல் ஒரு பக்கமாக வடியும்படி, புருவங்கள் தடுப்பாக இருக்கின்றன.


அது மட்டுமல்லாது; இமைப்பதனால் கண்கள் ஈரத்துடன் எளிதில் சுழலவும் முடிகின்றது. எமது கண் இமையோரத்தில் 20,30 சிறு சுரப்பிகள் உள்ளன. கண் இமைகள் மூடும்போது, இச் சுரப்பிகள் நீரைச் சுரக் கின்றன. இந்த நீர் கண்களுக்கு நன்மை பயக்கின்றது. கண்ணீர் சுரப்பியில் உள்ள கண்ணீரும் இவ்வாறுதான் பயன்படுகிறது.

ரிஸ்மினா,
ஹெம்மாதகமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனையாளர்:— மருத்துவம்

# எமில் தியோடொர் கோச்சர்



(1841 - 1917)

தைரோயிட் சுரப்பிகள் சம்பந்தப்பட்ட நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது தவித்த ஒரு காலகட்டத்தில் மருத்துவத்துறையில் ஒரு விடிவெள்ளியாகத் தோன்றினார் எமில் தியோடொர் கோச்சர் அவர்கள். 1841 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி சுவிட்ஸர்லாந்தில் பிறந்த கோச்சர் மருத்துவத்துறையில் ஆற்றிய அளப்பரிய சாதனைக்காக 1909 ஆம் ஆண்டு 'நொபெல்' பரிசினையும் வென்றார். இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர், இறுதியில் முனைவர் எனும் ph.D பட்டத்தைப் பெற்றார். அதன்பின் மருத்துவம் சார்ந்த ஆய்வுத்துறையில் இவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். கோச்சரின் ஆய்வு வாழ்க்கையும் அவரின் அர்ப்பணிப்பும் பலருக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகவே இருந்தன.

இவரது கண்டுபிடிப்புக்கள் மருத்துவத்துறையின் பல பிரிவுகளில் பதிந்து சாதனை புரிந்ததை மருத்துவ உலகம் இன்றுவரை மறக்கவில்லை. பலத்த காயம் ஏற்படும்போது, நரம்பு மண்டலங்களுக்குள் இடம்பெறும் குருதித் தடையை முதன்முதலாக இவர் ஆழமாக ஆராய்ந்தார். ஆழமான காயங்களால் நரம்பு மண்டல குருதியோட்டங்கள் தடைப்படுவதாகவும் இத்தகைய குருதி நிறுத்தத்தால் உண்டாகும் மரணங்களுக்குத் தமது கண்டுபிடிப்புக்களின் மூலம் நிரந்தர முற்றுப்புள்ளியையும் இவர் வைத்தார்.

கிருமிநாசினிகளைக் கொண்டு மருத்துவம் செய்வது, அறுவை சிகிச்சை உபகரணங்களால் உண்டாகும் தொற்று நோய்களுக்கு தீவிர சிகிச்சை தரும் வழிமுறைகள், இடுப்பு சார்ந்த பகுதிகளில் அறுவை சிகிச்சை, பக்றீரியாக்களால் எலும்பிலும் எலும்பு மச்சைகளிலும் உண்டாகும் தொற்றுநோய்களுக்குத் தேவையான சிகிச்சைகள் என அறுவை சிகிச்சை சார்ந்த ஏராளமான அறிவுரைகளையும் தீர்வுகளையும் கோச்சர் வழங்கினார். அத்துடன், ஹேர்னியா (Hernia) என அழைக்கப்படும் ஒருவகை வீக்கங்களை கையாள கோச்சர் தந்துள்ள மருத்துவ முறை இன்றுவரை ஆச்சரியப்படும் ஒரு விடயமாகவே இருக்கின்றது. கழுத்துக்குக் கீழே பெரிய பை போன்று தொங்கும் திடீர் வீக்கங்களுக்கு தைரொய்ட் சுரப்பியின் திடீர் வளர்ச்சியே காரணம் என்றும் கோச்சர் மிகத் துல்லியமாகக் கண்டறிந்தார். இந்த நோயின் வீரியத்தைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியில் அதை இல்லாமல் செய்யும் மருத்துவ முறைகளையும் கோச்சர் அறிமுகப்படுத்தினார்.

மருத்துவத்துறையில் இடையறாத இவரின் ஆய்வுகளாலும் கண்டுபிடிப்புகளாலும் பல நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கி நோய்களைத் தீர்க்கக் கூடியதாகவும் இருந்தது. இதனாலேயே, மருத்துவ உபகரணங்கள் பல இவரின் பெயரை இன்றும் தாங்கி நிற்கின்றன. இத்தகைய பெருமைகளைக் கொண்ட கோச்சர் 1917 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஆர்.ஜே

## ஏன்? எதற்கு? எப்படி?

**★ வெங்காயத்தை வெட்டும்போது கண்கள் கலங்குவது ஏன்?**



வெங்காயத்தை வெட்டும்போது அதில் உள்ள Propanethiol S-oxide எனும் ரசாயனப்பொருளானது, இலகுவில் ஆவியாகி காற்றுடன் கலந்து எமது கண்ணைத் தாக்குகின்றது. இதன் தாக்கத்தில் இருந்து தப்பிக்கவே, கண்கள் எரிச்சலடைந்து, கண்ணீரைச் சுரக்கின்றன.

**★ காலையும் மாலையும் சூரியனை நேரடியாகப் பார்க்க முடிகின்றது; ஆனால், பகலில் மட்டும் பார்க்க முடியாமல் கண்கள் கூசுகின்றன. அது ஏன்?**



சூரியஒளியானது, காற்றுமண்டலத்தைக் கடந்துதான் எம்மை வந்தடைகின்றது. இந்த வளி மண்டலத்தில் நைதரசன், ஒட்சிசன் போன்ற பல வாயுத் துணிக்கைகள் உள்ளன. காலையும் மாலையும் சூரியஒளி சாய்வாகப் பக்கவாட்டிலிருந்து வருவதால் இந்த வாயுத் துணிக்கைகளில் பட்டு, சிதறடிக்கப்படுகின்றது. (ஒளி ஊடுருவ வேண்டிய தூரம் அதிகம்) அதிகம் சிதறாத செம்மஞ்சள், சிவப்பு நிற ஒளிகள் நம் கண்களுக்குப் புலப்படுகின்றது. பகலில் உச்சியில் இருக்கும் சூரியஒளி செங்குத்தாக (தூரம் குறைவு) எம்மை நோக்குவதனால் சூரியனைப் பார்க்க நாம் சிரமப்படுகிறோம்.

**★ 'பேர்ள் துறைமுகத் தாக்குதல்' (Pearl Harbour Attack) என்றால் என்ன?**

இரண்டாம் உலகப்போரின்போது, அமெரிக்காவிற்கு சொந்தமான ஹவாய் 'பேர்ள்' துறைமுகத்தில் மிக அதிகமான அமெரிக்க போர்க் கப்பல்கள், விமானங்கள், ஆயுதங்கள் என்பவற்றோடு போர் வீரர்களும் நிலைகொண்டிருந்தனர். இத்துறைமுகத்தின்மீது 1941 டிசம்பர் 07 இல் ஜப்பானினால் நிகழ்த்தப்பட்ட அதிரடித் தாக்குதல் அமெரிக்காவிற்குப் பெரும் இழப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இது அமெரிக்கா, உலகப்போரில் ஈடுபடுவதற்கு உடனடிக் காரணமாகவும் அமைந்தது.



**★ பால் ஏன் பொங்குகிறது?**

பாலை சூடாக்கும்போது, அதனுள் இருக்கும் கொழுப்பானது பிரிகையடைந்து பாலின் மேற்பரப்பில் மிதக்கின்றது. பால் கொதிக்க ஆரம்பித்தவுடன், குமிழ்கள் வெளியேறுவதை மேலேயுள்ள இந்தக் கொழுப்புப் படலம் தடுக்கின்றது. இதனால், மேலெழுந்து வெளியேற முடியாத குமிழ்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, அந்தப் படலத்தை மேல் நோக்கித் தள்ளுகின்றன. அதற்குப் போதுமான சக்தி கிடைத்ததும் அந்தப் படலத்தை மேலே தள்ளி வெளியேற்றிவிட்டு, குமிழ்கள் ஆவியாக வெளியேறுகின்றது.



ஜெ.விபாகர்

## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 4656
ஆர்.எஃப்.ரஜினா, இப்னு பதூதா வீதி, புத்தளம்.



அங். இல: 4657
பு.மிதுஷா, வீரபுரம், நேரியகுளம்.



அங். இல: 4658
ரா.இந்துஜா, இறைம்பைக்குளம், வவுனியா.



அங். இல: 4659
எம்.ரியாஸ் அத்தாஸ், ஹன்சகிரிய, கள்-எலிய.



அங். இல: 4660
ஏ.எஃப்.ஃபாஹீமா, கிரிங்கதெனிய, மாவனல்லை.



அங். இல: 4661
ஏ.எம்.அல்தாப், வத்தல்பொல, பாணந்துறை.



அங். இல: 4662
என்.எம்.முய்ஸ்டீன், கடுருவல, பொலன்னறுவை.



அங். இல: 4663
ஆ.சிவப்பிரியன், இணுவில் தெற்கு, சுன்னாகம்.



அங். இல: 4664
என்.எம்.முஸ்னி, தெனிபிடிய, வெலிகம.



அங். இல: 4665
ஐ.எம்.வாஸீம், புத்தளம் வீதி, சிலாபம்.



அங். இல: 4666
ந.தனுஷ் பிரதீப், கிரிமெட்டிய, கண்டி.



அங். இல: 4667
ஞா.பகிர்தா, இராமநாதபுரம், கிளிநொச்சி.

## நிரம்பிய பாத்திரம்



ஒரு மகா ஞானியிடம், கல்வி கற்பதற்காக இளைஞன் ஒருவன் வந்தான். அவன், அவரிடம் பல கேள்விகளைக் கேட்டான். ஆசானும் உரிய பதிலளித்தார். ஆனால், அந்த இளைஞனுக்கோ அந்தப் பதில்கள் திருப்தியைக் கொடுக்கவில்லை. அவன் நினைத்து வந்த பதில்களோ, ஞானமோ அவனுக்குக் கிடைக்கவில்லை. இதனால், அவன் அந்த ஞானியைப் பற்றித் தரக்குறைவாக எண்ணி மனக் குறையுடன் அங்கிருந்து புறப்பட்டான்.

ஆனால், ஞானி, ''கொஞ்சம் பொறு, தேநீர் அருந்தலாம்'' என்று கூறி ஒரு கோப்பை நிரம்பத் தேநீரை எடுத்து வந்து அக்கோப்பையை அந்த இளைஞனின் முன் வைத்தார். மேலும் மேலும் அக்கோப்பையில் தேநீரையும் ஊற்றினார். இதனால், கோப்பை நிரம்பி வழிந்து, தரை நெடுகே ஓடி வீணாகப் போனது. அதிர்ச்சியுற்ற இளைஞன், ''போதும் போதும் நிறுத்துங்கள் கோப்பையில் இடமில்லை; ஊற்றிப் பயனில்லை'' என்றான்.

ஆசான் சிரித்துக் கொண்டே, ''இப்படித்தான், அறிவைப் பெற வேண்டும் என்றால், அதை ஏற்க உன்னில் இடம் இருக்கவேண்டும்'' என்றார்.

நமக்குத்தான் அனைத்தும் தெரியும் என்ற அகந்தையுடன் ஒரு விடயத்தை அணுகினால், அதனை முழுமையாக அறிந்துகொள்ள முடியாமல் போய்விடும். நம் மனதில் உள்ள அகந்தையை நிராகரித்துவிட்டு, அதன்பின்னரே மற்றவர் பேச்சை செவிமடுக்க வேண்டும்.

ஜெ.விபாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே நெருப்பைப் பயன்படுத்திய மனிதன்

ஜெருசலேம் நாட்டைச் சேர்ந்த ஹீப்ரு பல்கலைக் கழகம் மற்றும் டொரொன்டோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவொன்று அண்மையில் நடாத்திய ஆய்வொன்றின்படி, 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே அதாவது, 1 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே, மனிதன் நெருப்பைப் பயன்படுத்தியுள்ளான் என்பது கண்டறியப்பட்டுள்ளது.


தென் ஆபிரிக்காவின் 'வொன்டர் வெக்' குகையில் 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களின் எலும்புகள் மற்றும் கருவிகள் கிடைத்துள்ளன. அத்துடன், அக்குகையில் எரிந்த நிலையில் தாவரங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், அக்காலகட்டத்தில் மனிதன் சமையல் செய்ததற்கான அடையாளங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றை ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்திய விஞ்ஞானிகள் குழு, 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே, மனிதன் நெருப்பைப் பயன்படுத்தியுள்ளான் என்ற முடிவிற்கு வந்துள்ளனர். இத்தகவல் 'நெஷனல் எகடமி ஒஃப் சயன்சஸ்' என்ற சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டுள்ளது.

# கண்ட நகர்வை கண்காணிப்பதன்மூலம் நிலநடுக்கத்தைக் கணிப்பிடலாம்



பூமியின் கண்டத்திட்டு நகர்வை தொடர்ந்து கண்காணிப்பதன்மூலம் நிலநடுக்கத்தை முன்கூட்டியே கணிப்பிடலாம் என சீன விஞ்ஞானிகள் அறிவித்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக, சீனா நிலநடுக்கக் கண்காணிப்பு மற்றும் பேரிடர் தடுப்புத் துறை ஆய்வாளர்கள் கூறியுள்ளதாவது; நிலநடுக்கத்தை முன்கூட்டியே கணிப்பதற்கான புதிய செயற்றிட்டத்தை சீனா உருவாக்கியுள்ளது. 'நேவிகேசன்' செயற்கைக் கோள் அடிப்படையிலான இந்த செயற்றிட்டத்தில், Data Processing தொழில்நுட்பத்திற்கென 260 தொடர் கண்காணிப்பு மையங்கள் மற்றும் 2,000 பகுதிநேர கண்காணிப்பு மையங்களும் பயன்படுத்தப்படவுள்ளன. இப்புதிய செயற்றிட்டமானது, பருவ நிலையை முன்கூட்டியே கணித்தல் மற்றும் அது தொடர்பான ஆய்விற்கும் பயன்படுத்தவுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.




# நீரில் வாழ்ந்திருக்கக்கூடிய டைனோசிரஸ்

சிறந்த பேராசிரியரும் மிகச் சிறந்த விஞ்ஞானியுமான ப்ரையன் ஜே. ஃபோர்ட் என்பவர் டைனோசிரஸ்கள் பற்றிய மிக நுணுக்கமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளார். அவ்வாறான அரிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்த அவர், பி.பி.சி. நிகழ்ச்சி ஒன்றில் டைனோசிரஸ்கள் குறித்தான தமது ஆய்வுகளைப் பற்றிக் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.



அவரது கருத்தின் படி, ''மிகப் பெரிய உருவமுடைய, நீண்ட வாலைக்கொண்ட டைனோசிரஸ்கள் பாலைவனங்களில் சுற்றித்திரிந்து அதன் இரையைத் தேடுவது என்பது அதற்கு மிகவும் சிரமமான ஒரு விடயமாகவே இருந்திருக்கும். இது சாத்தியமற்றதும் கூட. ஆனால், அதன் வாலானது, நீரில் நீந்துவதற்கும் மிதந்தபடி செல்வதற்கும் ஏற்றவகையில் இயல்பாகவே அமைந்துள்ளது. மேலும், அது நீந்துவதற்கு உறுதுணை புரியும் சாத்தியமும் உள்ளது.

இந்த டைனோசிரஸ்கள் நீரில் இருக்கும்போது, அதன் எடை முழுவதும் நீரினூடாகத் தாங்கப்படுகின்றது. இச்செயற்பாடானது, அதற்கு இரையைப் பிடிப்பதற்கு மிக எளிதாகின்றது. எனவே, டைனோசிரஸ் நீரில் வாழ்ந்திருக்கக்கூடிய ஒரு விலங்காகவே காணப்படுகின்றது என்று கூறியுள்ளார். இவரது இந்தக் கருத்து 100



வருடங்களுக்கு முன்னர் அறிவியலாளர் ஒருவர் கூறிய கருத்தை ஒத்துக் காணப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.




# அழிவினை எதிர்நோக்கும் கடற்கரைப் பறவையினங்கள்

கடல்சார் பறவைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஜோன் க்ரொக்ஸெல் என்பவர் அண்மையில், தரையில் இனப்பெருக்கம் செய்து கடலுக்குச் சென்று உணவு தேடும் அல்பட்ரொஸ் (Albatross) குடும்பத்தைச் சேர்ந்த பறவையினங்கள் குறித்த ஆய்வொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதுபற்றிய ஆய்வு முடிவின் போது, அவர் கருத்துத் தெரிவிக்கையில்; 'அல்பட்ரொஸ்' குடும்பத்தைச் சேர்ந்த 22 வகையான பறவையினங்களில் 17 வகைகள் அழிந்துவிடும் அபாய நிலையில் உள்ளன, வர்த்தக ரீதியான நவீன மீன்பிடி முறைகளாலும் பெருச்சாளிகள், காட்டுப் பூனைகள் போன்ற தரைவாழ் உயிரினங்களாலும் இப்பறவைகளின் இனப்பெருக்





கத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு, இந்த இனம் அழிவடையக் காரணமாக அமைந்துள்ளது.

கடல் மற்றும் கடல்சார்ந்த பகுதிகளின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்கும் அவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளை எச்சரிக்கை செய்வதற்கும் இந்த கடல்சார் பறவைகள் மிகவும் அவசியமானவை. இவற்றின் அழிவானது, பெரும் கவலைக்குரிய விடயமாகவே உள்ளது'' என்று கூறியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனி நிறுவனத்தின் 'அல்ட்ரொபுக்' லெப்டொப்



'சோனி (Sony) நிறுவனம் தனது முதலாவது அல்ட்ரொபுக் லெப்டொப் கணினியை தயாரித்துள்ளது. Vaio ரகத்தின் அடிப்படையில் T13 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த 'அல்ட்ரொபுக்' கணினி தற்போது ஐரோப்பிய சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. அங்கு இதன் விற்பனை விலை 679 யூரோக்களாகும். இந்தக் கணினியானது, 'அப்பிள் மெக்புக்' கின் வடிவத்தை ஒத்ததாக இருப்பதுடன், மிகவும் மிருதுவானதாகவும் நிறையில் குறைந்ததாகவும் உள்ளதுடன், இது 17.8 மில்லிமீற்றர் உயரத்தையும் 32.3 மில்லிமீற்றர் அகலத்தையும் கொண்டதாகும். இதன் நிறை 1.6 கிலோ கிராம் ஆகும். மேற்படி கணினியானது, பாவனையாளரின் சகலவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழித்த ஃபைல்ஸ்களை மீண்டும் பெறலாம்...!



கணினியைப் பயன்படுத்துபவர்கள் பலர் தங்களின் முக்கியமான தரவுகள் (டேட்டா) அடங்கிய ஃபைல்ஸ்களை மீண்டும் எடுக்க முடியாத அளவில் அழித்துவிட்டு அதனை எப்படி மீண்டும் பெறுவது என்று தவிக்கின்றனர்.

இழந்த ஃபைல்ஸ்களை மீட்டுத் தரும் இலவச புரோகிராம்கள் பல இணையத்தில் உள்ளன. சில, இலவச பதிப்பினையும் கூடுதல் வசதிகளுடன் கூடிய கட்டணம் செலுத்திப் பெறும் பதிப்பினையும் கொண்டதாக இருக்கின்றன. அந்தவகையில் நன்றாகச் செயல்படும் டேட்டா ரிகவரி புரோகிராம் ஒன்று அண்மையில் இணையத்தில் அறிமுகமாகியுள்ளது.

இதன் பெயர்: 'Raid2Raid' ஆகும். இதனைத் தரவிறக்கம் (டவுன்லோட்) செய்வதற்கான முகவரி: http:// www.diskinternals.com/

# இணைய பிரவுசர் பக்கங்களை அழிக்க...



உங்கள் கணினியில் பல்வேறுபட்ட இணைய பிரவுசர்களைப் பயன்படுத்துவீர்கள். அவ்வாறு பயன்படுத்தும்போது, ஒவ்வொரு பிரவுசர்களிலும் பார்க்கும் பக்கங்கள் சேர்ந்துகொள்ளும். இவற்றை அழிக்க கணினியை சுத்தப்படுத்தும் மென்பொருட்களைக் கொண்டு செய்யலாம். எனினும், Browser Cleaner மென்பொருள் சிறியதும் மிக விரைவாகச் செயல்படக் கூடியதுமாகும்.

அத்துடன், ஒரே நேரத்தில் அத்தனை பிரவுசர்களின் பக்கக் காட்சிகளையும் (History) அழிக்கலாம். இந்த Browser Cleaner மூலம் Internet Explorer, Firefox, Chrome, Opera, Safari, Avant Browser, Flock போன்ற அத்தனை பிரவுசர்களின் பக்க வரலாறுகளை அழிக்கலாம். அத்துடன், இதில் மேலும் பல வசதிகளும் உண்டு.

# வைரஸ் இருப்பை சோதிக்க வழிகள்



உங்களிடம் சந்தேகப்படும் வகையில் ஏதேனும் கோப்புகள் இருந்தால் (அதாவது வைரஸ் தொற்றி இருக்குமோ என்ற வகையில்) அவற்றை 'வைரஸ் டோட்டல்' என்னும் இந்தத் தளத்தில் ஏற்றிச் சோதித்துப் பாருங்கள். இந்தத் தளத்தில் இலவசமாகவே மொத்தம் 32 வைரஸ் எதிர்ப் பான்களைக் கொண்டு இந்த ஏற்றப்பட்ட கோப் புகளை சோதித்து உடனே முடிவுகளை அறிவித்துவிடுகிறார்கள். உங்கள் சந்தேகமும் தெளிவாகிவிடும்.

மேற்படி இலவச சேவை இணையத்தில் பெறு வதற்கான முகவரி: http:// www.virustotal.com/




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, மே மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 23, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org